The Good Pastor

நல்ல ஆயன்

“நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்.” (அரு. 10:11-16.)

புத்தகம் 16. | செப்டெம்பர் 1918. | இலக்கம் 9.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

சத்திய கத்தோலிக்குத் திருச்சபை நமக்குப் படிப்பிக்கிற பரம இரகசியங்களுக்குள் பரிசுத்த திரித்துவமே மகா பெரிய பரம இரகசியமாகும். இப்பரம இரகசியம் எதில் அடங்கியுளதெனில்: சர்வேசுரன் ஒரே ஒருவர் என்பதிலேயும், அவர் தேவ சுபாவத்தில் ஒருவராயினும் ஆள்வகையில் பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவென மூவரென்பதிலேயும், இம்மூவரும் மூன்று சர்வேசுரனாகாமல் ஒவ்வொருவரும் சர்வேசுரனாயிருக்கிறா ரென்பதிலேயும் அடங்கியுளது. சுருக்கிச் சொல்லுங்கால் சர்வேசுரன் தேவ சுபாவத்தில் ஒருவராயும் ஆள்வகையில் மூவராயுமிருக்கிறார். இப்பரம இரகசியத்தை விசுவசியாத எவரும் இரட்சண்யமடையாரென்பது நிச்சயம். இரட்சண்யத்துக்கு இது இவ்வளவு இன்றியமையாததா யிருப்பதின் நிமித்தம், சத்திய திருச்சபை தான் ஏற்படுத்தியுள்ள சகல சாங்கிய சடங்குகளிலும் இதை நமக்கு ஞாபகப்படுத்தத் தவறுகிறதில்லை. பரம திரித்துவத்தின் பேராலேயே நம்மேல் சிலுவை வரைந்துகொள்ள திருச்சபை படிப்பிக்கிறது; பரம திரித்துவத்தின்பேராலேயே தேவத்திரவிய அநுமானங்களை நிறைவேற்றுகிறது; பரம திரித்துவத்தின்பேராலேயே பரிசுத்த பூசைப்பலியைத் துவக்கி பரம திரித்துவத்தின்பேராலேயே அதை முடிக்கிறது. பரம திரித்துவத்தின்பேராலேயே எதையும் அர்ச்சித்து ஆசீர்வதிக்கிறது. பரிசுத்த பாப்பானவரும் சரி, மேற்றிராணிமார், குருக்களும் சரி, தாங்கள் மந்திரிக்கும் எதையும் பரம திரித்துவத்தின் பேராலேயே அர்ச்சிக்கிறார்கள். இப்படியாக திருச்சபை தான் நடத்தும் எல்லா பரிசுத்த சடங்குகளிலும் இப்பரம இரகசியத்தை நமக்கு ஞாபகப்படுத்திவருவதினால், அதைக் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் விசேஷ விதவாய் விசுவசிக்கவேணுமென்று விரும்புகிறதென்பது விசிதமாய்த் தெரிகிறதல்லவா?

* * *

பழய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசீரைப் பெறுதல் மகா உத்தமமான பத்திக்

கள் பிரையாசைப்பட்டாலும் பயனற்றதாயிருக்கிறது. இப்படி ஒய்வு நாட்களில் வேலைசெய்வதை பிறமதஸ்தர் கண்டு, நம் மதத்தை நிந்தை செய்வதுமல்லாமல், நம்மைப் பழித்துப் பேசுவதற்கு மிடமாயிருக்கிறது. சிலர் அந்த ஒய்வு நாளில் வீண்காலம் போக்குவதும், மதுபானப் பிரியர் அதிகமாய்க் குடித்து தெருக்களில் ஆடல் பாடல் செய்து உளரித் திரிவதுமுண்டு. சிலர் அந்த நாளில் தெருத்திண்ணைகளில் கூடி நாள் முழுதும் சீட்டு விளையாடுவார்கள். இப்படி அநியாயமாய்க் கழிக்கும் அந்த நாளில் ஒரு பங்கையாவது ஞானவிஷயத்திற் செலவழிக்க அதாவது கிறீஸ்துவப் பிள்ளைகளைச் சேர்த்து ஒரு கூடத்தில் அல்லது மரநிழலில் ஒழுங்குபட இருத்தி, சிறிது மந்திர உபதேசம் சொல்லிக்கொடுக்கக் கூடுமானால் எவ்வளவு ஞானதாயமாயிருக்கும்! அதுவுமல்லாமல் நம்மைப் பார்க்கிற இதர மதஸ்தர்களும் எவ்வளவு மேலாய் நம்மை மதிப்பார்கள்! ஒய்வு நாளைப் பரிசுத்தமாய்ச் செலவழிக்கும் வழக்கம் முதல் முதல் பெரியவர்களால் மன ஊக்கத்தோடு முயற்சிக்கப்பட்டால்தான் சிறியோரும் அதைக் கண்டுபாவிக்க ஏற்ற வழியாகும். மேலும் சிலர் கோவிலுக்கு வந்தாலும் குருவானவர் பிரசங்கம் சொல்லப்போகும் சமயம் பார்த்து கோவிலுக்கு வெளியேவந்து இல்லாத வீண் கதைகளைப் பேசிச் சிரித்து விளையாடுவார்கள். இவ்விதமானோர் தாங்கள் ஞானப் பிரையோசனமடையாமற் போவதுமல்லாமல் தங்கள் துர்மாதிரிகையால் மற்றவர்களும் அதை இழக்கக் காரணமாயிருக்கிறார்கள்.

அரிய நண்பர்களே, இதுதானா கிறீஸ்துவ ஒழுக்கம்! கத்தோலிக்கப் பத்தியனுசார வழக்கம்! நாமே யிப்படி நடப்போமாகில் எப்படி மோக்ஷத்தையடைவது? ஆகையால், ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுப் பூசை காண்பதும், குருவானவர் சருவேசுரனைப் பற்றி சம்பாஷிக்கும்பொழுது நாம் அவரில் கொண்ட விசுவாசத்தை உறுதிப்படுத்திப் பத்தியை வளர்த்து நமது நடத்தையைத் திருத்தி நடந்து இவ்வுலகத்தில் மனப்பாக்கியமாய் வாழ்வதற்கும் மறுவுலகத்தில் நாம் என்றென்றைக்கும் முகமுகமாய்த் தேவதரிசனமடையும் பாக்கியத்தைப் பெறுவதற்குமுரிய வழிகளாயிருக்குமென அறியக்கடவோம்.

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

56-ம் அதிகாரம்.

உதட்டில் அதை வைத்து முத்திசெய்யுந் தருணத்தில் விம்மல் அழுகையுடன் பிரதர் லியோ தோளில் சாய்ந்து உயிர்துறந்தார்.

அன்னியன் இதற்குப்பின் சற்று நேரம் மவுனமாய் நின்று, பிரதர் லியோ பக்கமாய் மகா துக்க வியாகுலத்துடன் திரும்பி: "சார்! உமது அருமை மனைவியை நிஷ்டூரமாய்க் கொலைசெய்த என்மேல் நீர் பாய்ந்து பழிவாங்காமல் நிற்பானேன்?" என்று வினவ,

பிரதர்.—இது கிறீஸ்துவனுடைய ஒழுக்கத்துக்கு விரோதமானது.

அன்னி.—எது?

பிரதர்.—பழிவாங்குவது!

அன்னி.—அப்படியானால், என்னை என்ன செய்யப்போகிறீர்? போலீசார் கையில் என்னை ஒப்புக்கொடுப்பீரோ? அப்படியானால் தக்ஷணமே வாரும் போலீஸ் ஷ்டேஷனுக்குப் போகலாம்.

பிரதர்.—உம்மை மன்னிப்பதே என் கடமை!

அன்னி.—என்ன! உமது மனைவியைக் கொலைசெய்த என்னையா?

பிரதர்.—ஆம்.

அன்னி.—இது மெய்தானோ?

பிரதர்.—இது சத்தியம்.

அன்னி.—எதுமுதல் உமக்கு இந்தக் கருத்து?

பிரதர்.—எப்போதும் உண்டு இந்தக் கருத்து. ருக்மணியின் மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டபோதே, அவளைக் கொலைசெய்தவனுக்காக கடவுளைப் பார்த்து மன்னிப்பளிக்க மன்றாடினேன்.

அன்னி.—நீர் இப்படிச் செய்ததற்குக் காரணமென்ன?

பிரதர்.—தின்மை செய்வோருக்கு நன்மை செய்யவேண்டும் என்பது கிறீஸ்து வேதத்தை உண்டாக்கின கர்த்தருடைய படிப்பினை, அவ

..ரும் தமது கொலைஞருக்குப் பொறுதிகொடுத்தார்.

அன்னி.—அப்படியானால் எனக்கு நீர் மன்னிப்பு கொடுப்பீரோ?

பிரதர்.—25 வருஷங்களுக்கு முன்னேயே அந்தக் கொலைப்பாதகத்தை மன்னித்துவிட்டேன். இப்போதும் எப்போதும் மன்னிக்கத் தயாராயிருக்கிறேன்.

அன்னி.—அப்படியானால் நான் அனியாயமாய்ச் சிந்தின மாசற்ற இரத்தப்பழி என்னை விட்டு நீங்கிப்போமோ?

பிரதர்.—நான் உமக்கு மன்னிப்புக்கொடுத்த போதிலும் அந்தப் பாவதோஷத்தைப் பொறுக்க வேண்டியவர் சர்வேசுரனே.

அன்னி.—என் பாவதோஷத்தையும் அவர் பொறுப்பாரோ?

பிரதர்.—அவரை நம்பி அவர் கற்பனையை அனுசரித்தால் உமது பாவதோஷத்தை அவர் மெய்யாகவே பொறுப்பார்.

அன்னி.—உமது வார்த்தை உண்மை தானே சார்?

பிரதர்.—உண்மையே.

அன்னி.—அப்படியானால் இவ்வளவு தாராளமாய் எனக்கு மன்னிப்பு அளித்த உமக்கு அனேக வந்தனம். இப்பேர்ப்பட்ட அரிய போதனையைப் போதிக்கும் உமது வேதத்துக்கு நித்திய மங்களம். ஆகையால் நான் கட்டிக் கொண்ட சண்டாளப் பாதகம் பொறுக்கப்படும் என்கிற நம்பிக்கையால், இதோ, இந்தக்ஷணமே, உமது ஸ்ரீ வேதத்தில் உட்படுகிறேன்.

பிரதர்.—வேதத்தில் உட்படுவதற்குமுன் முக்கியமான பல சத்தியங்களை அறிவது அத்தியாவசியம்.

அன்னி.—அவைகளை தயவுடன் வெளிப்படுத்தினால் அவைகளைக் கற்றறிவேன் சார். என் மனச்சங்கடம் தீர்ந்தாலே போதும்.

பிரதர்.—சர்வேசுரன் ஒருவரே; அவர் ஒருவராயினும், பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து என மூன்று ஆட்களாயிருக்கிறார்.

அன்னி.—இதை நம்புகிறேன் சார்.

பிரதர்.—கெட்டுப்போன மனித ஜன்மத்தை இரட்சிக்கும்படி சுதனாகிய சர்வேசுரன், கன்னிமரியாயின் உதரத்தில் அற்புதமாய் உற்பவித்துப் பிறந்து, 33 வருஷகாலம் இவ்வுலகில் சஞ்சாரம்செய்து, தமது பரிசுத்த வேதத்தை ஸ்தாபித்து, அற்புதங்களை நடத்தி, கடைசியாய்த் தமது இரத்தத்தைச் சிந்தி சிலுவையில் மரணமானார்.

அன்னி.—அவர் ஸ்தாபித்த வேதம் எது சார்?

பிரதர்.—இப்போது நாங்கள் அனுசரித்து வரும் (ரோமான் கத்தோலிக்) என்னப்படும் சத்திய வேதமே.

அன்னி.—அவர் மரித்தபின் என்னமாய்ப் போனார் சார்?

பிரதர்.—அவர் மரித்த மூன்றாம் நாள் உயிருடன் எழுந்து, 40-நாள் பரியந்தம் மனிதருடன் சஞ்சாரஞ்செய்து, தமது வேதத்தில் சேர்ந்தவர்களுக்குப் புத்திமதிகளைச் சொல்லி, சகலரும் அறிய மோக்ஷத்துக்கு எழுந்தருளினார்.

அன்னி.—அப்படியா?

பிரதர்.—உலக முடிவில் இவர் மறுபடியும் இவ்வுலகத்துக்குவந்து இறந்துபோன சகலரையும் தமது வல்லபத்தால் உயிருடன் எழுப்பி, பாவிகளைச் சபித்து நரகத்தில் தள்ளி, புண்ணியவாளரை ஆசீர்வதித்து மோக்ஷத்துக்குக் கூட்டிக்கொண்டுபோவார். மோக்ஷமும் நரகமும் ஒருபோதும் முடியாது. மோக்ஷத்துக்குப் போகிறவர்கள் ஒருபோதும் சாகாமல் சகல பாக்கியத்துடன் சீவிப்பார்கள். நரகத்துக்குப் போகிறவர்களோவெனில் அங்கே எப்போதும் வேதனைப்படுவார்கள். இவைதான் சத்திய வேதத்தின் முக்கியமான சத்தியங்கள்.

அன்னி.—கடவுளால் ஸ்தாபிக்கப்பெற்ற இந்த உன்னதமான வேதமே மெய்யான வேதமென்று என் முழுமனதுடன் நம்புகிறேன். ஆ! பகவானே! என் கர்மத்தை க்ஷமித்தருளும். ஆங்காரத்தாலும் வைராக்கியத்தாலும் நான் புரிந்த இந்த மகா துரோகத்தையும் மற்றப் பாவங்களையும் பொறுத்தருளும். இனி ஒருபோதும் துரோகம் புரியேன். என் பாலியம் முதற்கொண்டு அனுஷ்டித்துவந்த மதாச்சாரங்களை விட்டுவிட்டு தற்போது நான் கைக்கொள்ளப்போகும் சத்திய வேதத்தைவிட்டு ஒருபோதும் பிரியேன்; இது சத்தியம்.

மறுபடியும் அன்னியன் பிரதர் லியோ பக்கமாகத் திரும்பி: "சார், என் பாதகத்தை உலகம் அறிந்து அதற்கான ஆக்கினையை நான் பெறுவது நீதியிலும் நீதியென்று எண்ணுகிறேன். ஆகையால் நாளைக்கே நீதிஸ்தலத்துக்குச்

சென்று அதை அவர்களுக்கு அறிவிப்பேன். அவர்கள் எனக்கு மரணத்தீர்ப்பு விதிப்பார்கள் என்பது நிச்சயம்.

அன்னேரத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர், "சந்தேகமற தூக்கில் போடப்படுவான் என்பது நிச்சயம்" என்று டாக்டர் காதில் மெதுவாய்ச் சொன்னான்.

அன்னியன் பிரதரை நோக்கி: "ரெவரெண்டு சார், அன்னேரத்தில் நீர் என் அருகாமையினின்று எனக்காக கடவுளை மன்றாடுவீரல்லவா?"

பிரதர்.—நீர் சாகுந்தருவாயில் உமது பக்கத்தில் நின்றுகொண்டு உமக்கு என்னால் கூடிய சகாயஞ் செய்வதுடன் உமக்காக சர்வேசுரனையும் அவருடைய கன்னித்தாயாரையும் பார்த்து பிரார்த்திப்பேன்.

அன்னி.—மெத்த வந்தனம்.

பிரதர்.—நீர் விருத்தாப்பியராயிருப்பதால் நீதி பரிபாலிப்போர் உமதுமட்டில் இரக்கமாயிருப்பார்கள்.

அன்னி.—அதற்குச் சம்மதியேன். ஒரு நர உயிரைப் பறித்த நானும் என் உயிரை இழப்பதே நியாயம். ஆகையால் இது விஷயத்தில் நீர் யாதொன்றும் முயற்சிக்கவேண்டாம் சார்.

பிரதர்.—(அன்னியனுடைய இரு கரங்களையும் அன்புடன் பிடித்துக்கொண்டு) ருக்மணியின் மரணத்தால் எனக்குண்டாயிருந்த துக்க வியாகுலம் மெத்த. ஆனால் இப்போது என் இருதயத்தில் உற்பத்தியாகும் சந்தோஷ மகிழ்ச்சிக்கு அளவில்லை (என்று தன் கண்களில் ததும்பும் சந்தோஷப் பாஷ்பங்களைத் துடைத்தார்.)

அன்னி.—இந்தச் சந்தோஷத்துக்குக் காரணம் சார்?

பிரதர்.—ருக்மணிக்கு சரீர மரணம் உண்டானது வாஸ்தவமே: ஆனால் அவள் மரணத்துக்குப்பின் நான் மற்றவர்கள் மூலமாய் அறிந்துகொண்டதுபோல, அவளுடைய ஆத்துமம் இரக்ஷிக்கப்பட்டதென்று நம்பி, ஆறுதலடைந்தேன். ஆனால் சத்திய தேவனை அறியாமல் அநேக பாவாக்கிரமங்களைக் கட்டிக்கொண் டிருக்கும் உம்முடைய ஆத்துமமோ, தேவகோபத்துக்கு உள்ளாகி, செத்த பிரேதத்துக்குச் சமானமாயிருக்கிறது. மேலும் அந்தப்பாவங்களுடன் சாவீராகில் நித்திய நரகாக்கினைக்கு உள்ளாவீர். ஆனால் தற்போது, தேவகிருபையால் நீர் அந்தப் பாவங்களுக்கெல்லாம் பச்சாத்தாபப்பட்டு அவைகளை மறுபடி கட்டிக்கொள்ளுகிறதில்லையென்கிற தீர்மானஞ் செய்துகொண்டு, சர்வேசுரனால் ஸ்தாபிக்கப்பெற்ற சத்திய சபையில் சேரப் பூரணமனங் கொண்டிருப்பதை நான் பார்ப்பதால் எனக்குச் சொல்லிமுடியாத சந்தோஷானந்தம் உண்டாகிறது!

அன்னி.—என்னால் உமக்கு உண்டான நஷ்டத்தையுஞ் சங்கடத்தையும் லக்ஷியம் செய்யாமல் என் நன்மையைமாத்திரங் கோரும் ஐயனே! நீரே, என் மெய்யான ஆப்தன். என் ஆத்மாவையும் என் சரீரத்தையும் காப்பாற்றின இரக்ஷகன்! ஈஸ்வரனுக்குப்பின் நீரே என் உபகாரி! என் இவ்வாறு மொழிகிறேன் என்று அறிவீரோ சார்? நான் அந்தக் கொடிய கொலையைக் கட்டிக்கொண்ட 25 வருஷகாலமாய் என் ஆத்மாவில் உண்டாயிருந்த மனோ வியாகுலத்தையும் சங்கடங்களையும் அனுபவிப்பதிலும் சாக வெகுவாய் ஆசித்துக் கோரியும் அதுவும் வந்ததில்லை. பலாத்காரமாய் என் உயிரை வதைத்துக்கொள்ள பலதடவை தீர்மானித்தும் அதற்குங் கையுங் காலும் வந்ததில்லை.

ஆனால், என் பிராண நேசரே! நான் கட்டிக்கொண்ட சண்டாள கொலையையும் என் மற்றக் கருமங்களையும் மனதில் நினைத்து, உமது ஆலோசனைப்படி அவைகளுக்காக மனதில் சங்கடப்பட்டு, அவைகளை முற்றிலும் வெறுத்துத் தள்ளி, நீர் ஆசரித்துவரும் வேதமே சத்திய வேதம், அதுவே பகவானால் உண்டாக்கப்பட்ட வேதம் என்று என் மனதில் ஸ்திரமாக எண்ணி, அதில் உட்பட நான் தீர்மானங்கொண்ட க்ஷணமே, ஆ! ஆ! இது என்ன அற்புத சம்பவம்! என் இருதயத்தில் முன் காணப்பட்ட மனோ சங்கடங்களும் பயமும் திகிலும் ஆதித்தனைக் கண்ட பனிபோல் முற்றும் மறைந்துபோயின! இது எப்பேர்ப்பட்ட அதிசயம்! இது உமது மன்றாட்டின் பலனோ; அல்லது உமது வேதத்தின் சத்தியோ, நான் அறியேன். தற்போது என் ஆத்மா கலக்கமும் குழப்பமும் பயமுமின்றி சமாதான நிலமையில் இருக்கிறது. இதற்கெல்லாம் என் அன்பரே, நேசரே, இரக்ஷகா! நீரே காரணர். ஆகையால் உமக்கு ஆயிரம் வந்தனம் (என்று பிரதர் லியோ பாதங்களில் விழுந்து விம்மி விம்மி அழத் தொடங்கினார்.)

உடனே பிரதர் லியோ குனிந்து அன்னியனைத் தமது கையால் தூக்கியும் அவர் எழுந்

திரியாதபடியால் அருகாமையில் நின்றுகொண்டிருந்தவர்கள், அவரைத் தூக்கி பக்கத்திலிருந்த சோப்பாவில் கிடத்தினர்கள்.

அன்னேரத்தில் பிரதர் லியோ ஒரு பக்கத்திலும் டாக்டர் மறு பக்கத்திலும் உட்கார்ந்துகொண்டு இளைத்துக் களைத்து மிதமிஞ்சின துக்க சாகரத்தால் மூர்ச்சையாய் விழுந்த அன்னியனை உபசாந்தப்படுத்திக்கொண்டிருந்தார்கள். களைதீர்ந்து தெளிவு உண்டாகும்படிக்கான பானுதிகளைக் கொடுத்து முகத்தில் ஜலந்தெளித்து விசிறினபோது அப்போதைக்கப்போது கண்திறந்து வாயில் என்னவோ உச்சரித்துக்கொண்டு பிரதர் லியோ பக்கமாய்த் திரும்பிப்பார்த்துக் கண்மூடிக்கொள்வார்.

சற்று தூரத்தில் நின்று கொண்டு அங்கு நடக்கும் விருத்தாந்தங்களைப் பார்த்துக்கொண்டிருந்த சிரேஷ்ட ஸ்வாமியார் சோபா கிட்டப்போய் வியாதிக்காரனுடைய நிலைமையைப் பற்றி டாக்டரை வினவினபோது, அவர் வியாதியஸ்தனுடைய நாடியையும், அவனுடைய இடது பக்கத்தையும் பரீக்ஷித்துப் பார்த்தபின் இன்னும் ஒரு மணிநேரங்கூட இவர் உயிரோடிருப்பாரென்று சொல்ல இடமில்லையென்றார். உடனே ஸ்வாமியார் ஜலக்குப்பியைக் கையில் ஏந்திக்கொண்டு பிரதர் லியோவைப் பார்த்து "கேளும் வியாதிக்காரனை ஞானஸ்நானம் பெற இஷ்டமாவென்று?" சொல்லவே, பிரதர் லியோ வியாதிக்காரன் காதில் மெதுவாய் ஓதி, "ஞானஸ்நானம் பெற உமக்கு இஷ்டமா" என்றார்.

வியாதிக்காரன்.—ஞானஸ்நானம் என்றால் என்ன?

பிரதர்.—ஞானஸ்நானமானது உம்மைச் சத்திய சபையில் சேர்த்து உம்மைச் சர்வேசுரனுக்குப் பிள்ளையாக்கும் ஓர் தேவசடங்கு.

வியா.—இன்னம் என்னை உங்கள் வேதத்தில் சேர்த்துக்கொள்ளவில்லையோ?

பிரதர்.—இல்லை, உமக்கு மனமிருந்தால் உடனே சேர்த்துக்கொள்ளப்படுவீர்.

வியா.—தாமதியாதேயுங்கள், மரணம் கிட்டியிருக்கிறது, என்னைக் கிறைஸ்ட் வேதத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

பிரதர்.—நான் உமக்குச் சற்றுநேரத்திற்கு முந்தி சத்திய வேதத்தைப்பற்றி சொன்னவற்றையெல்லாம் நீர் விஸ்வசிக்கிறீரா?

வியா.—சகலத்தையும் ..என்...முழு...மனதுடன்...நம்புகிறேன்...ஜீஸஸ்..கிறைஸ்டே...மெய்யான ..தேவன்...அவர் மனிதருக்காக...துன்பப்பட்டு ..மரணமாகி...மூன்றும் நாள்...உயிருடன் ...எழுந்தார்...அவரே திரும்பவும் ..இவ்வுலகத்துக்கு ..வந்து . புண்யவாளரை ....சொர்க்கத்துக்கு...கூட்டிச் செல்லுவார் ..பாபிஷ்டிகளை ...நரகத்தில் தள்ளுவார் . அவரே...சத்திய தேவன்...இதை சத்தியமாய் . நம்புகிறேன்...நான் ..புரிந்த ..கொலைக்காகவும்...மற்றக்...கர்மங்களுக்காகவும்...மனச்சங்கடம்...படுகிறேன்...இனிக் கடவுளுக்கு இப்பேர்ப்...பட்டதுரோகம் ..புரியேன்...இது சத்தியம்...என்று ஒவ்வொரு வார்த்தையாய் மெல்ல மெல்ல உச்சரித்தான். இதைக் கேட்ட குருவானவர், வியாதிக்காரனுக்கு சூசை என்னும் பெயரிட்டு ஞானஸ்நானம் கொடுத்தார்.

இப்போது நான் கிறீஸ்டியன்தானே! என்று வியாதியஸ்தன் பிரதர் லியோவைப் பார்த்து வினவினபோது: ஆம், நீர் இப்போது சர்வேசுரனுடைய பிள்ளை: மோக்ஷத்துக்குப் பங்காளியுமானீர் என்றார்.

இதற்குப்பின் வியாதியஸ்தன் வெகுநேரம் கண்மூடி மவுனமாயிருந்தபின், சடுதியில் கண்திறந்து, பிரதர் லியோ பக்கமாய்த் திரும்பி, "என் ஆத்மாவில் இப்போது உண்டாகும் சந்தோஷ ஆனந்தத்தை வருணிக்க என்னால் இயலாது. இதைப்பற்றி முன்னதாக அறிந்திருந்தால், அப்போதே இந்தச் சத்திய வேதத்தில் சேர்ந்திருப்பேன். ஆ! கடவுளே! தெய்வமே! பகவானே! என் சீவியகாலமெல்லாம் பாபிஷ்டியாய் நடந்த எனக்கு இன்னேரத்தில் இவ்வளவு சந்தோஷ ஆனந்தத்தைக் கட்டளையிட்டீரே! உமக்கே மங்களம், துதி, பூஜை" என்று கண்மூடவே, அவருடைய இரு கண்களிலும் நின்று கண்ணீர் மாலை மாலையாய்ப்புறப்பட்டது. அன்னேரத்தில் டாக்டர் வியாதியஸ்தனுடைய கையைப் பிடித்துப்பார்த்து, முடிவு நெருங்கி வருகிறது என்றார்.

மறுபடியும் வியாதியஸ்தன் கண்திறந்தபோது பிரதர் லியோ, தமது கழுத்தில் போட்டுக்கொண்டிருந்த பாடுபட்ட சுரூபத்தைக் கழற்றி அதை வியாதிக்காரன் கையில் கொடுத்து, "இதோ நமக்காக மரணமான சேசுக்கிறீஸ்துநாதருடைய சுரூபம்; இதைப் பத்தியுடன் முத்திசெய்யும்" என்றார். உடனே

வியாதிக்காரன் பிரதர் லியோவை ஒரு கையாலும், சுரூபத்தை மற்றொன்றாலும் பிடித்துக் கொண்டு "என் கணக்கற்ற கருமங்களால் உமக்கு வருவித்த துரோகங்களை மன்னியும்" என்று மெதுவாய் உச்சரித்து, உதட்டில் அதை வைத்து முத்திசெய்யுந் தருணத்தில் விம்மல் அழுகையுடன் பிரதர் லியோ தோளில் சாய்ந்து உயிர்துறந்தார்.

அன்னியனான வியாதியஸ்தன் இறந்த சங்கதியை அறிந்த போலீஸ் இன்ஸ்பெக்டர், தமது நோட்புக்கில் எழுதிவைத்ததைக் கிறுக்கிவிட்டு, தன்னுடனிருந்த நாலு ஜவான்களுடன் வெளியே புறப்பட்டார். அங்கு கூடியிருந்த சபையோரும் நடந்த விருத்தாந்தங்களைக் கண்டு அதிசயித்து, நாடகமேடையில் ஆடப்பட்ட நாடகத்திலும் இது அதிகப் பெரிய நாடகமாயிருக்கிறதென்று கூறிக்கொண்டு மண்டபத்தை விட்டு வெளியேறினார்கள்.

மரணமான சூசை யென்னப்படும் வைத்தியநாத நாயகருடைய பிரேதம் அன்று இராத்திரி ஒரு அறையில் பத்திரப்படுத்தப்பட்டு மறுநாள் சாயந்திரம் அபரிமிதமான ஜனக்கூட்டத்துடனும் ஆரவாரச் சிறப்புடனும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பிரதர் லியோ என்று அழைக்கப்படும் தேவதாஸ் பண்டிதர் விசாகப்பட்டணத்தில் எப்படி வந்து சேர்ந்தாரென்று இதை வாசிப்போருக்குத் தெரியாதானபடியால், நாம் அதை விளக்கிக் காட்டுவோம்.

ருக்மணி கொலை செய்யப்பட்ட பின், போலீஸ் ஆபிசர்களும் மாஜிஸ்டிரேட்டும் பண்டிதரை விசாரணைசெய்து, அவரை போலீஸ்ஸ்டேஷனில் அன்று இராத்திரி பத்திரப்படுத்தும்படி மாஜிஸ்டிரேட்டு உத்தரவு செய்தாரல்லவா? இதற்குள்ளாக, பண்டிதருடைய மாணாக்கர்களும் இஷ்டரும் இரகசியமாய் தங்களுக்குள் பேசிக் கொண்டு, அன்று இரவு பெரும் ஜனக்கூட்டத்தைச் சேர்த்து, பண்டிதரை ஏற்றிப்போகும் வண்டியை மறித்து பண்டிதரைத் தப்பித்து விடும்படிக்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து வைத்தார்கள்.

ஏற்கெனவே திட்டப்படுத்தின பிரகாரம், பண்டிதரை ஏற்றிக்கொண்டுபோன வண்டியின் சக்கரம் ஒரு சிறு பையன் காலின்மேல் ஏறவே அவன் பெருங்கூச்சல் பாய்ச்சி அழத்தொடங்கினான். அன்னேரத்தில் அங்கு கூடியிருந்த பெரும் ஜனத்திரள் வண்டிக்காரனோடும் போலீசாரோடும் வாக்குவாதம் செய்யத் தலைப்பட்டு, பெருஞ் சந்தடியும் கூக்குரலுமாயிருந்தபடியால் பண்டிதருடன் வண்டியில் உட்கார்ந்திருந்த இரு ஜவான்களும் வண்டியைவிட்டு இறங்கி, ஜனக் கூட்டத்தைச் சமாதானப்படுத்த முயற்சித்தார்கள். அன்னேரத்தில், முன்னதாக ஏற்பாடுசெய்யப்பட்டபிரகாரம், ஒரு பையன் பைத்தியக்காரனான நடேசனுடன் ரஸ்தாவில் ஒண்ணுக்கு இருக்கும் சமயத்தில் போலீஸ் வேஷம் தரித்துக்கொண்டிருந்த ஒருவன் நடேசன் கிட்டப் போய் "ஏண்டா ரஸ்தாவில் ஒண்ணுக்கு இருந்தாய்?" என்று பயமுறுத்தி அவனை வண்டிப்பக்கமாய் அழைத்துக்கொண்டு செல்ல; இன்னொரு வேஷக்காரனான ஜவான் வண்டியிலிருந்த பண்டிதரைக் கீழே இறங்கச்செய்து, அவருடைய உடுப்பை நடேசனுக்கு மாட்டி, "அடே ஒரு வார்த்தையும் பேசாமல் இதில் உட்கார்ந்திரு" என்றான். உடனே, அருகாமையில் தயாராய் நின்றுகொண்டிருந்த குதிரைவண்டியில் பண்டிதரை ஏற்றிக்கொண்டுபோய் ரயில் வருமட்டும் ஒரு வீட்டில் ஒளித்துவைத்தார்கள். அவ்விடத்தில் பண்டிதர் இளைப்பாறி போசனஞ்செய்து தமது குடுமியைக் கத்தரித்துவிட்டு, மீசை தாடியுடன் பக்கிரி வேஷம் போட்டுக்கொண்டு தமது மாணாக்கருடைய உதவியால் அன்று இராத்திரி 10-மணிக்கு வந்த ரயில்வண்டியில் ஏறினார்.

அன்று இரவு போலீஸ்ஸ்டேஷனில் அடைபட்டவன் பைத்தியக்காரனென்று நடுச்சாமவேளையில் அறிந்த க்ஷணமே போலீஸ் ஆபீசர் ரயில்வே ஸ்டேஷனுக்குச்சென்று சகலரிடத்திலும் பண்டிதரைப்பற்றி விசாரித்தும், உளவு அகப்படாதபடியால், துக்கமும் வெட்கமுங் கொண்டு, செங்கற்பட்டு ஸ்டேஷனிலிருந்து வடக்கிலும் தெற்கிலுமுள்ள ஸ்டேஷன்களுக்கு தந்திகொடுத்து பண்டிதருடைய பிராயம், உயரம், வர்ணம், முகச்சாடை முதலியவைகளை விவரமாய் தெரியச்செய்து, அப்பேர்ப்பட்ட மனிதனை அறெஸ்ட் செய்யும்படி ஆர்டர் அனுப்பினார்.

எக்மோர் ஸ்டேஷனில் ரயில்வண்டி வந்து நின்ற சமயத்தில் மேற்படி தந்தி அந்த ஸ்டேஷனுக்குவந்து சேர்ந்தபடியால், வண்டிகளைப் பூட்டி போலீஸ்காரர் வண்டி வண்டியாய்ப் போய்த்தேடிப்பார்த்தும் கைதி அகப்படவில்லை. ஆனால் சம்சயத்துக்குள்ளான மூன்று நபருகளைப் பத்திரப்படுத்தினார்கள்.

பக்கிரி வேஷம் போட்டுக்கொண்ட பண்டிதரோவெனில் அற்பத் துன்பமுமின்றி ஸ்டேஷனைவிட்டு வெளிப்பட்டுக் குதிரைவண்டி பேசி பக்கிங்காம்கனல் ·ரேவுக்குப்போய்ச் சேர்ந்து, நெல்லூருக்குப் பயணமாகும் ஓர் படகில் ஏறினார். அக்காலத்தில் ஈஸ்ட் கோஸ்ட் ரயில் ரோட்டு புதிதாய்ப் போடப்பட்டுவந்தது. பண்டிதர் நெல்லூருக்குப்போய்ச் சேர்ந்த சில தினங்களுக்குள் சிறுகச் சிறுகப் பிரயாணம் செய்து விசாகப்பட்டணம்போய்ச் சேர்ந்தார். அவருக்குச் சந்நியாசங் கொள்ள அபேட்சையிருந்தபடியால் அவ்வூரிலுள்ள மடத்து சிரேஷ்டரிடம் தன் பூர்வ விருத்தாந்தங்களையெல்லாம் விவரமாய் அறிக்கைசெய்து, தன்னை அந்த மடத்தில் சேர்த்துக்கொள்ளும்படி மன்றாடினார். சிரேஷ்ட ஸ்வாமியார், சில காலத்துக்குமுன் செங்கற்பட்டில் நடந்த கொலைச்சங்கதியைப்பற்றி ஏற்கெனவே பேப்பரின் மூலமாய் அறிந்திருந்தபடியால், மதுராஸ் முதலிய இடங்களுக்குக் கடிதம் எழுதி பண்டிதருடைய குணகுணங்களையும், நடவடிக்கை முதலியவைகளையும்பற்றி தீர்க்கமாய் அறிந்துகொண்டபின் அவரை நவசந்நியாசியாகச் சேர்த்துக்கொண்டார். மேலும் பண்டிதருடைய விருத்தாந்தங்கள், சிரேஷ்டர் தவிர வேறுயாருக்குந் தெரியாது வைத்தியநாதநாயகர் விவரிக்குமட்டும். இவர் மடத்தில் சேர்ந்தபோது பழய பெயரை மாற்றிக்கொண்டு லியோ என்னும் பெயரை வைத்துக்கொண்டார்.

தேவதாஸ் பண்டிதர் என்று அழைக்கப்பட்டவர், பிரதர் லியோ என்னும் நாமம் பூண்டு விசாகப்பட்டண சந்நியாசி மடத்திலிருக்கிற செய்தியையும், அவ்வூர் ஸ்கூலில் நாடகம் ஆடப்பட்ட நாளில் நடந்த விருத்தாந்தங்களையும்பற்றிக் கேள்வியுற்ற அவருடைய பெற்றோரும், பந்து ஜனங்களும், பழய புதிய ஸ்நேகிதர்களும் சொல்லிமுடியாத சந்தோஷங்கொண்டு லெட்டர் மூலமாயும், தந்தி வழியாயும் மங்கள வாழ்த்துதலை அனுப்பிவைத்தனர். பிறகு தமது குமாரனான தேவதாஸ் சந்நியாசம் புரிவதைப்பற்றி அறிந்த வயோதிபரான விஸ்வாசநாயகர் சந்தோஷ ஆனந்தங்கொண்டார். தர்மானந்தபுரத்தாரோவெனில் சந்தோஷத்துக்குரிய இச்சங்கதியைப்பற்றிக் கேள்விப்படவே தாங்கள் குருமாரோடு வெகு ஆடம்பரச் சிறப்புடன் தேவாலயத்தில் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் சமர்ப்பித்தார்கள்.

அந்த ஊர்மடத்தின் பெரிய தாயார் அம்மாள், தன் பிரிய தமயனார் உயிருடன் வாழ்ந்து சர்வேசுரனுக்கு தேவ ஊழியம் செய்வதைப்பற்றி அறிந்தமாத்திரத்தில், மற்ற சகோதரிமார்களோடும் பிள்ளைகளோடும் கோவிலுக்குச் சென்று சர்வேசுரன் அவரை விசேஷவிதமாய்க்காப்பாற்றினதற்காக தெதேயும் என்னும் தேவஸ்துதியைப்பாடி சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தனள்.

விஸ்வாசநாயகர், தமது மனைவியையும் பிள்ளைப் பேரப்பிள்ளைகளையுங் கூட்டிக்கொண்டு விசாகப்பட்டணம் சென்று, தன் அரிய குமாரனைக் கண்டு மகிழ்ந்து அன்புடன் அவரைக் கட்டி மினவினபின், இரு கரங்களையும் மேலே உயர்த்தி "ஸ்வாமீ, என் சிரேஷ்ட புத்திரனை தேவ ஊழியத்துக்கு அழைத்துக்கொள்ளும்படி நான் செய்த என் பிரார்த்தனை அனுகூலமானதால் உமக்கு என்றும் ஸ்தோத்திரம்" என்றார். சிலநாள் அங்கு இருந்தபின் தமது குடும்ப சமேதராய் தமது ஊருக்குப் புறப்பட்டுப்போய் மறுவருஷத்தில் தன் பிரிய குமாரனாகிய பிரதர் லியோ அரவணைப்பில் பாக்கியமான மரணம் அடைந்து மோக்ஷப் பிராப்திபெற்றார்.

கண்டியிலிருந்த சங். டிக்ரூஸ் ஸ்வாமியாரும் அவருடைய பிரிய தாயாராகிய அபிராமியம்மாளும் பிரதர் லியோவுக்கு பெரிய கடிதம் எழுதி தங்கள் விருத்தாந்தங்களை அவருக்கு அறிவித்து, அவரைச் சர்வேசுரன் விசேஷ விதமாய் காப்பாற்றினதற்காக அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்.

தென் இந்தியாவிலுள்ள பண்டிதருடைய கணக்கற்ற ஸ்நேகிதர்களிலும் மாணாக்கர்களிலும் அனேகர் விசாகப்பட்டணம் சென்று தங்களுக்குச் சங்கீதவித்தைக் கற்றுக்கொடுத்த குருவைப் போற்றிப் புகழ்ந்து களித்தார்கள். மீனாக்ஷியம்மாளும் அவள் புருஷனும் புதுவையில் சத்திய வேதத்தில் சேர்ந்து சுகமே வாழ்வதாக அவர்கள் மூலமாய் அறிந்துகொண்ட பிரதர் சந்தோஷங்கொண்டார்.

பிரதர் லியோ குருப்பட்டத்துக்காக படிக்கும்படி அவருடைய சிரேஷ்டர் அவருக்கு உத்தரவு கொடுத்தும், அவர் தாழ்ச்சியினிமித்தம் அந்த உன்னத அந்தஸ்தில் சேர மனமின்றி சன்னியாசியாகவே அந்த மடத்திலிருந்து வெகு அக்கரை கவனத்துடன் சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றிவருகிறார்.

முற்றிற்று.

EVILS OF DRINKING.
மதுபானக் கேடுகள்.

(**Communicated**).

"கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறி யாமை கொளல்." (பொய்யாமொழி.)

ஒவ்வொரு பட்டணத்திலும் சராசரி 20 அல்லது 25 சாராயக்கடைக ளிருப்பதாக வைத்துக்கொள்வோமானால், இக்கணக்குப்படி இந்தியாதேசமுழுவதிலும் ஏறக்குறைய இரண்டு லக்ஷம் கடைகள் இருக்கின்றனவென்று ஏற்படும். இக்கடைகளையெல்லாம் ஒருங்கே சேர்த்து, ஒரு கடைக்கு 20-அடி அகலம் விழுக்காடு அவைகளை ஒரே வீதியிலிரண்டு பக்கமும் அமைக்க அவ்வீதி 380-மைல் நீளமாகும். சரி, நாம் இம்மாதிரியான சாராயக் கடை வீதியில் இருப்பதாகவும், இந்தியாவுக்குள்ளிருக்கும் குடியரெல்லோரும், அவர்கள் குடும்பங்களுடன் அவ்வீதியினூடே நடந்துபோவதாகவும் உருபிகரித்துக்கொள்வோம். ஒரு வருஷத்தில் அந்த வீதி எந்த நிலைமைக்குள்ளாகிறதென்று பார்ப்போம்.

அதோ! ஐந்தைந்து பேர் வரிசை வரிசையாக 570-மைல் வரைக்கும் பரவி நிற்கிறார்கள். இவ்வீதியில் வருவது என்ன? தற்போது நடக்கும் யுத்தத்திற்கேகுஞ் சேனையா? அல்ல அல்ல சாதாரண பானம்போல் சாராயம், கள், பிராந்தி, முதலிய மதுவகைகளுக்காகத் தினந்தோறும் தப்பாமற் சாராயக்கடைகளுக் கேகும் 50-லக்ஷத்து ஆண், பெண் ஆகிய இவர்களின் சேனையாகும். இச்சாதாரணக் குடியர் தினந்தோறும் 20-மைல் நடந்தால் இவ்வீதியைக் கடந்து செல்ல ஒரு மாதத்திற்குமேல் செல்லும்.

இப்போது அவர்கள் போய்விட்டார்கள். அவர்களுக்குப் பின்னேயே 60-மைல் வரைக்கும் வியாபித்து வரிசைக்கு ஐந்தைந்து பேராக நடந்துவரும் இன்னொரு சேனை வருகிறது. இச்சேனை குடியர்கள் என்றே பெயர்பெற்ற ஓயாக் குடியர்கள் ஐந்து லட்சங்கொண்டது. அவர்கள் எப்போதும் குடிக்கும் வழக்கங்கொண்டு குடி தீபனத்தை யடக்க சக்தியற்று, அதற்கு அடிமைகளாய்ப்போய், அதனால் மதியிழந்து நிதியிழந்து மானமிழந்து மரியாதையிழந்து மிருகங்களுக்குச் சமானமாய் ஜீவிக்கிற ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளுமே. இவர்கள் இருவரிருவராக நின்றால் இச்சேனை 150-மைல் நீளும். அவர்களை யுற்றுநோக்குங்கால், அவர்கள் நரை திரை விழுந்த கிழவர்களும் அழகிய மயிரையுடைய சிறுவர்களுமே. ஐயோ பரிதாபம்! இச்சேனையிற் பெண்மக்களும் காணப்படுகிறார்களே! இவர்கள் நல்ல ஸ்தானத்திலிருந்து தவறி இக்குடியைக் கற்றுக்கொண்டு, அதனால் ஆண்மக்களைவிட அதிக துயரத்திலாழ்ந்தவர்கள் போல் அவர்களது முகத்தில் அது பளிச்சென்று காட்டுகின்றது. இவர்கள் இவ்வீதியைக் கடந்து செல்ல ஏழு நாள் பிடிக்கும்.

இது மிகவும் துக்கத்திற்குரியதும் வெட்கத்துக்குரியதுமான காட்சியாயிருந்தாலும், இவ்விடத்தைவிட்டு விலகிப்போய்விடாதே. ஏனெனில், இவர்களுக்குப்பின் ஒரு லக்ஷங் கைதிகளையுடைய இன்னொரு சேனை வருகிறதைப் பார். இவர்கள் சிறைச்சாலையிலிருந்து வருகிறார்கள். இச்சேனைக்கு முன்னணியில் மனிதர்களைக் கொன்ற கொலைப்பாதகர்கள் ஒரே வரிசையாக இருத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களது கைகள் மானிட இரத்தத்தினால் தோய்ந்திருப்பதைப் பார். அவர்கள் தங்கள் கழுத்துக்களில் சுருக்குக் கயிற்றுடன் தூக்குமரத்திற்குக் கொண்டுபோகப்படுபவர்கள். மற்றவர்களோ தாங்கள் செய்த கடுங்குற்றத்திற்காக ஜீவாந்தர சிக்ஷை விதிக்கப்பெற்று, அந்தமான் (Andaman Island) தீவிலுள்ள சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்படுபவர்கள். நமது தேச சட்டங்களுக்கு விரோதமான குற்றங்களை இம்மனிதர்கள் சாராயக்குடி வெறியினால் கட்டிக்கொண்டார்கள்.

இன்னுஞ் சற்றுக் கவனித்துக்கேள்! அக்கூக்குரல்கள் எங்கிருந்து வருகின்றன? அதோ! இருப்புச் சங்கிலிகளாற் கட்டப்பட்டு, பலமுள்ள சேவகர்களால் காக்கப்பட்டு, அதிக உக்கிரத்துடன் கத்திக்கொண்டுபோகும் மனிதர்கள் யாவர்? அவர்கள் அதிக குடியினாற் பிதற்றுகிற பைத்தியக்காரர்களே! அவர்களது கண்கள் பயங்கரத்துக்குரிய காட்சிகளினால் வாதைப்படுகின்றன. அவர்கள் காதுகள் இடிமுழக்கம் போன்ற சத்தங்களால் அடைக்கப்படுகின்றன. அவர்களுடைய உடம்புகளின்மேல் மெல்லிய புழுக்கள் ஊர்ந்துசஞ்சரிக்கின்றன. இவையெல்லாவற்றைக்காட்டிலும் கொடியதானது நரக

பசாசுக்கள் அவர்கள் காலத்திற்கு முன்னேயே அவர்களை வாதிக்கத்தொடங்கிவிட்டன. அவர்களும் இப்போதுபோய்விட நாம் முன்னையவிட ஒருவாறு நல்ல காற்று சுவாசிக்கிறோம்.

ஆயினும், அதோ! ஆகாயம்வரைக்கும் அளாவிநின்று பூதகணம்போல் தோற்றுகிறதே அது என்ன? மப்பு மந்தாரமா? கருப்பாக நீண்டு ஒரே கிரமமாக இங்கே வருவது என்ன? இது சவபவனியின் வரிசை. குடியினல் மரணமடைந்த ஒரு லக்ஷம் ஜனங்கள் தங்கள் கல்லறைகளுக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள். குடிகாரர் மரணமடைந்தால் அவர்களுக்காக துக்கங்கொண்டாட அநேகர் போகமாட்டார்களாதலால், ஒரு மைலுக்கு 30 சவ வண்டிக ளிருப்பதாக வைத்துக்கொள்வோம். அதன்படிக்கு அச்சவபவனி 3,333-மைல் வரைக்கும் நீண்டிருக்கும். சாதாரணமாகச் சவ வண்டிகள் கல்லறைகளுக்கு மிகவும் மெதுவாகக் கொண்டுபோகப்படுவதால் அவைகள் இச்சாராயக்கடைகள் நிரம்பியிருக்கும் வீதியைக் கடந்து செல்ல ஒரு வருஷம் பிடிக்கும். ஆம், அநேக சவ வண்டிகள் மிகவும் மெதுவாகவே செல்லுகின்றன. ஆனால் சவப்பெட்டிக்கு வழியில்லாத ஒரு குடிகாரனுடைய பிரேதம் போடப்பட்ட ஒரு முரட்டு வண்டியை இரக்கமற்ற வண்டிக்காரன் வேகமாகச் செலுத்திக்கொண்டுபோகும்போது, அவன் "சீக்கிரம்! சீக்கிரம்!! இவனது தேகத்தைக் கல்லின்மேற்போட்டு நொறுக்குங்கள்! நொறுக்குங்கள்!! யாரும் அக்கறைகொள்ளாத ஒரு பிச்சைக்காரன் இவன்" என்றிவ்வாறாகப் பாடிக்கொண்டு போவதைச் சற்றுக்கேள்.

சவப்பெட்டிகள் உன் பக்கமாய்ப் போகும்போது அதனுள் வைத்திருக்கும் குடிகாரர்களுடைய சடலங்களைப் பார். அதிகக் குடியினல் குலைவெந்து அல்லது வெடித்துத் திடீரென இறந்தவர்கள் சிலர். இவர்களுடைய முகத்தில், அவர்களது கடைசி நேரத்திலிருந்த பயங்கரமுள்ள குறிகள் இன்னும் நன்றாகக் காணப்படுகின்றன பார். குடியால் வீடு போய்ச் சேரவும் சக்தியற்று, வழிகளிலேயே விழுந்துகிடந்து குளிரினல் விரைத்துச் செத்துப்போனவர்கள் சிலர். அதிகமாய்க் குடித்து சமுத்திரக்கரை ஆற்றங்கரை ஏரிக்கரை யோரமாய்த் தட்டித் தடுமாறிக்கொண்டு போகும்போது, கால் தவறி விழுந்து அவைகளில் சஞ்சரிக்கும் மச்சங்களுக்கிரையாய்ப் போனவர்கள் சிலர். மற்றும், குடியால் பயித்தியம்பிடித்து, வனங்களில் மிருகம்போல் திரிந்து, அவலமாயிறந்து, அடக்கம்செய்வார் யாருமில்லாமையால் அங்கேயே கழுகலகை நாய்நரிகளுக்கிரையாகி அல்லது நாறிப்புழுபுழுத்துக் கொண்டிருந்தவர்கள் சிலர். குடியால் பித்தம் தலைக்கேற, அம்மயக்கத்தினல் வீழ்ந்து தலை கல்லின்மேல்மோத, தலையினின்று மூளை வெளிப்பட்டுச் செத்தவர்கள் சிலர். குடிமயக்கத்திலிருக்கும்போது கத்தியாற் குத்துண்டு கொல்லப்பட்டவர்கள் சிலர். வீடுகள் நெருப்புப்பற்றி யெரியும்போது குடிவெறியால் தப்பித்துக்கொள்ளத் திராணியின்றி தீயில் வெந்து சாம்பலானவர்கள் சிலர். மற்றும் வழிகளில் வண்டிகளி லகப்பட்டுக், கொஞ்சமேனும் உருவந் தெரியாமல் தொக்குப்போல் நொருங்கிப்போனவர்கள் சிலர். இவர்கள் எல்லாரும் வெவ்வேறு விதமாய்ச் செத்திருந்தாலும், இலாகிரியான மதுபானமே இவர்கள் அகால மரணத்துக்குக் காரணமாயிருந்ததென்று சொல்லவும் வேண்டுமோ? இப்பேர்ப்பட்டவர்களுடைய கல்லறைகளின் மேல் எதாவது ஞாபகச்சிலை போடும்பட்சத்தில், மற்றவர்களுக்குப் பாடமாக, அதில் இவன் குடிமயக்கத்தினல் செய்த தீவினையின் காரணமாய் மரணமடைந்தான்" என்றெழுதிவைப்பது சாலவும் நன்று.

இவர்களைத் தொடர்ந்து இன்னெரு சவபவனி ஒழுங்காகவருகிறது. அவை எவ்வளவென்று நமக்குத் தெரியாதிருந்தாலும் அநேக சிநேகிதர்கள் துக்கங் கொண்டாடுவதற்காக அவைகளைப் பின்றொடர்ந்து போகிறார்கள். இச்சவவண்டிகளில் குடிகாரருடைய அஜாக்ரதையினலும், குரூரத்தினலும் சம்பவித்த ஆபத்துகளிலகப்பட்டு அதினல் மரணமடைந்தவர்களின் பிரேதங்கள் போகின்றன. சிலர் மனம் வெறுத்து செத்தார்கள். சிலர் குரூரமாய்க் கொல்லப்பட்டார்கள். சில குடிகாரர்கள் குடி வெறியில் வீடுகளுக்கு நெருப்புவைத்ததினல் அதில் வெந்து சாம்பலானர்கள். குடிகார இன்ஜின் ட்ரைவர்களும், கொடியாட்டுவோர்களும் (flag men) குடிமயக்கத்தில் என்ஜின்களை அஜாக்ரதையாய் விட்டு அதினல் இருப்புப்பாதைகளிலகப்பட்டு சின்னபின்னமாகச் சிதைந்து கொல்லப்பட்டார்கள். மற்றும், சமுத்திரத்திலோ, ஒரு குடிகார நீராவிக் கப்பற்றலைவனுடைய துணிச்சலினல் கப்பலுடைந்ததினலோ செத்தவர்கள் சிலர்.

ஆனால், அதோ! இவ்வீதியின் கடைசியில் என்னவோ வருகிறதுபோல் காணப்படுகிறது. அது என்ன? அது சிறுவர்களின் சேனையைப் போல் தெரிகிறது. இவர்கள் யாரெனில், தங்கள் தாய் தந்தையர் கொடுமைகளினால் உயிரிழந்த மாசில்லாத குழந்தைகள். அதில் எவ்வளவுபேரிருக்கிறார்கள்? ஐயோ! இரண்டு லக்ஷம் சிறுவர்கள். அவர்கள் இருவரிருவராக நடந்தால் 30-மைல் வரைக்கும் அவ்வீதியில் நிற்பார்கள். ஒவ்வொருவனும் தான் "குடிகாரனுடைய பிள்ளை" என்ற சுட்டுப்பெயரைத் தன் வாழ்நாள் முழுவதிலு மணிந்திருக்க வேண்டும். அந்தோ பரிதாபம்! அவர்கள் எல்லாரும் வறுமையாலும் சிறுமையாலும் பிச்சையெடுக்கும்படியான நிர்ப்பாக்ய வந்தஸ்திற்குக் கொண்டுவிடப்பட்டவர்கள். மற்றும் அதில் அதிக கொடிதானது, அவர்கள் மூடத்தனத்திலும் கெட்ட சகவாசத்திலும் பழகிவருவதுதான்.

சில குழந்தைகள் பசியாலழுது வருந்துகிறார்கள். சிலர் தங்கள் தேகத்தை மூடிக்கொள்ளப் போதுமான கந்தையுமில்லாமல் குளிரினால் நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள். மேலும், அவர்கள் தங்கள் மிருகத்தனமான குடிகாரத் தந்தையர்களால் தாங்கள் பிறக்கிறதற்கு முன்னமேயே முட்டாள்களாக்கப்பட்டிருக்கிறார்கள். இவையெல்லாவற்றைக்காட்டிலும் மிகக் கொடிதானது, இவர்கள் தங்கள் குடிகாரத் தந்தையர்களிடமிருந்து மதுவுண்ணும் விருப்பத்தைச் சுதந்தரித்துக்கொண்டதினால், அவர்களுடைய ஸ்தானத்தைத் தாங்கள் வகிக்கவும், அவர்கள் செய்த அக்ரமங்களைத் தாங்கள் செய்யவும் தலைப்படுவதே. ஆகையால் இவர்கள் சாவுக்கு ஒரே வரிசையாகப்போகும் பயங்கரமுள்ள சேனையில் சேர்ந்துகொள்வார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தக் குடிகார வீதி தனது முழுவேலையை முடிக்க ஏறக்குறைய ஒரு வருஷம் பிடித்தது. இதற்குப் பின்னாலேயே மறு வருஷத்திற்கு வேண்டிய சாமான்களின் முற்படை தொடர்ந்துவருகிறது. இவ்விதமாக ஒரு வருஷத்தில் நமது தேசத்தில் மதுபானத்தினால் விளையுங் கேடுகள் இவ்வளவாயிருந்தால் கடந்த நூற்றாண்டுகளிலும், இனிவரும் எண்ணிக்கையில்லா வருஷங்களிலும் இவ்வுலகத்திலுள்ள ஜனசமூகத்திற்குவரும் தீமைகளை யளவிட்டுச் சொல்லவும் முடியுமோ?

மேற்கூறிய தொகைகளால் நாம் எல்லா விஷயங்களையும் சவிஸ்தாரமாக அறியமுடியாவிட்டாலும், அவைகள் நம்மைச் சுற்றிலும் நிறைந்துவரும் பிராணச்சேத சம்பவங்களைச் சுருக்கமாகக் காட்டுகின்றன. அவை ஒரு குடிகாரனுடைய வீட்டிலுள்ள இழிவான அசுத்தத்தை நமக்குத் தீட்டிக்காட்டக்கூடுமோ? பட்சமும் நெஞ்சிரக்கமுமுள்ள தகப்பன்மார்களும் புருஷன்மார்களும் தங்களுக்குப் பிரியமானவர்களுக்குச் சொல்லும் இனிய சொற்களை மதுபானம் எவ்வளவு இரக்கமற்றவையாயும் குரூரமுள்ளவையாயும் மாற்றிவிட்டதென்று சொல்லுமோ? குடிகாரன் யாரை நேசிக்கவும் போஷிக்கவும் கடமைப்பட்டிருக்கிறானோ, அவர்கள் இக்குடியனிடத்தில் எவ்வளவு அடிகள் உதைகள் பட்டார்களென்று தெரிவிக்குமோ?

மற்றும் புதிதாய்க் கலியாணஞ்செய்த பெண் தன் புருஷனிடத்தில் தான் பிற்காலத்தில் எதிர்பார்த்திருந்த ஆசையுள்ள எண்ணங்களும், சந்தோஷமான நம்பிக்கைகளும் எப்படிக் கெட்டுக் கசப்புள்ளவைகளாக மாறிவிட்டனவென்று நமக்கு விளக்குமோ? அவள் தன் புருஷனுடைய காலடிகள் கதவண்டை எப்போது கேட்குமோவென்று எவ்வளவு மணிநேரம் ஆவலுடனும் பயத்துடனும் எதிர்பார்த்திருந்தாளென்று எண்ணிக் காட்டக்கூடுமோ? மேலும் மனைவிகள் தங்கள் தலைவர்களுடைய வினைப்பயனைப்பற்றி எவ்வளவு துயரமிகுந்த கண்ணீர் சிந்தினார்களென்றும், எவ்வளவு வியாகுலம் நிறைந்த ஜெபங்களையும் கஸ்தியுள்ள கூக்குரல்களையும் அவர்கள் சொல்ல, கடவுள் இரக்கம்வைத்து கேட்டாரென்றும் காட்டுமோ? குடிகாரத் தகப்பன் அநாதைகளாய் விட்டுவிட்ட குழந்தைகளுக்கு வேண்டிய ஆகாரமும் வஸ்திரமும் கொடுக்கும் பொருட்டு, எத்தனை தாய்மார்கள் சரீரத்தையும், சில சமயங்களில் ஆத்துமத்தையும் கவனியாமல் உழைத்துவருந்துகிறார்களென்று அறிவிக்குமோ? தங்களுடைய பிரியமான குமாரர்கள் குடிகாரர்களாய்விடுவதைப் பார்க்க எத்தனை தாய்மார்களுடைய மனம் சஞ்சலத்துக்குள்ளாகிறதென்று உரைக்குமோ? மற்றும் இதே காரணத்தினால் மனம் வருந்தி, அதே விசனத்தினால் எத்தனை கிழத்தலைகள் மக்கி மாண்டுபோயினவென்றும் சொல்லுமோ? குடிகாரன் தான் சுயபுத்தியுடனிருக்கும் நேரத்தில் இக்கொடிய மதுபானப் பிரியத்துடன் எத்தனை கடின சண்டை

கள் போட்டானென்றும், அதை ஜெயிக்கமுடியாமல் மனக்கலக்கத்துடன் எத்தனை தடவை தற்கொலை புரிந்துகொள்ள துணிந்தானென்றும் நமக்கு வரைந்துகாட்டுமோ? இவையெல்லாவற்றையும் அவை நமக்கு விளக்கமாகக்காட்டமாட்டா. குடிகாரர் கால்வைக்கமுடியாத நித்திய பேரின்ப பாக்கிய ஸ்தலமாகிய மோட்சத்தினின்று எத்தனை ஆத்துமங்கள் தள்ளிவிடப்பட்டு, நித்திய துன்ப ஸ்தலமாகிய நரக பாதாளத்திற்குத் துரத்தப்பட்டனவென்று மறுலோகத்தின் கணக்கு புஸ்தகங்களைப் பரிசோதித்தாலன்றி சொல்லமுடியுமோ?

குடியினாலுண்டாகும் நஷ்டம் இவ்வாறிருக்க, இந்நரகத்துக்கடுத்த சரக்கில் வியாபாரஞ் செய்யும் அவ்வீதி முழுவதையும் அழிவாகிய பாதாளத்தின் அடிவாரத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடவும், அதைப் பிரபஞ்சத்தின் சாபமாகிய ஜலத்தினால் பத்தாயிரமடி வரைக்கும் மூடிவிடவும் யார்தான், எந்த மனிதன், எந்த பெண், எந்த குழந்தைதான் உடன்படாது?

“குடி குடியைக் கெடுக்கும்.”

SISTER MARY ASSUNTA.

மரி அசுன்தா சகோதரி.

(மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னிகை.)

1878—1905.

(முன் தொடர்ச்சி.)

அசுன்தா சகோதரி “சர்வேசுரனுடைய உதவியால் எல்லாவற்றையும் நிறைவேற்றவல்லவளாவேன்” என்று செய்துகொண்ட பிரதிக்கினை எப்பேர்ப்பட்டதாயிருந்ததென்றால் அது ஒரு விஷயத்தில் புதுமை செய்யக்கூடியதாயிருந்தது. இதைப்பற்றி அவளுடைய சிரேஷ்டதாயார் பின்வருமாறு எழுதுகிறாள் :—“நவம்பர் மாதம் 15-ம் தேதி அசுன்தா சகோதரி என்னிடம் வந்து, சமையற்கூடத்தில் இரண்டு மூன்று தினங்களுக்குத்தான் போதுமான நெய் இருக்கும் என்று சொன்னாள். அதற்கு நான் டிசம்பர் மாதம் 8-ம் தேதிவரையில் அது போதுமாயிருக்கும் என்றும், அத்தேதிக்குப்பின் இன்னும் வேறே நெய் நமக்குக் கிடைக்கும் என்றும் எண்ணுவதாகக் கூறினேன். அந்தநெய் அத்தேதிவரையிலும் வரவேண்டியதென்று கண்டிப்பும் கேலியும் கலந்த தொனியோடு விளங்கச்செய்தேன். தன் வழக்கம்போல் அசுன்தா சகோதரி மறுவார்த்தையொன்றும்பேசாமல் போய்விட்டாள். திரும்பவும் அவள் மறுநாள் என்னிடம்வந்து முற்கூறிய விண்ணப்பத்தையே மறுபடியும் செய்துகொள்வாளென்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அவள் வரவில்லை. நான் பெரிதும் ஆச்சரியப்படும்படி மடத்திலுள்ளோருக்கு ஒரு குறையுமில்லாமல், அந்த நெய் நான் குறித்த நாள் வரையிலும் வந்தது.”

மெய்யாகவே அசுன்தா சகோதரி தாழ்ச்சியினுடையவும், கீழ்ப்படிதலினுடையவும் உன்னத பதியை அடைந்தனள். அவளைச் சொற்பகாலத்துக்குள்ளாகத் தம்மிடம் அழைத்துக்கொள்ளச் சித்தமாயிருந்த சர்வேசுரன் அவளுக்குத் தாம் தயாரித்த சம்பாவனையை அதிகப்படுத்துவதற்காக ஒரு கடைசி சோதனையை அவளுக்கு அனுப்பினார். பக்தியுள்ள ஆத்துமங்களை அலைக்கழிக்கும் சந்தேகங்களும் மனக்கிலேசங்களும் அவளைத் துன்புறுத்தின. தன்னுடைய அபாத்திரத்தின் உணர்ச்சியும், தன் உதவாத தனத்தின் நினைப்பும் அவளுடைய மனதில் மேற்கொண்டன.

தான் பெற்றுக்கொண்ட வரங்களோடு முக்கியமாய் துறவற அழைப்பின் பெரிய வரப்பிரசாதத்தோடு தானொற்றுழைக்கவில்லையென்று கண்டுணர்ந்தாள். இக்காலத்தில் அவள் கடிதங்கள் பல எழுதினாள். அவைகள் அவளுடைய சிரேஷ்டர்கள் கவலைகொள்ள காரணமாயிருந்தன. இதுகாரியம் அசுன்தாவுக்குத் தெரியாது. தான் ஒழுங்குக்கும், அதிகாரத்துக்கும், சபைக்கும் விரோதமாய்க் கட்டிக்கொண்ட குற்றங்களுக்காக மன்னிப்புக்கேட்க, கண்ணீர்விட்டழுதுகொண்டு தன் சிரேஷ்ட தாயாரிடம் இரவில் அநேகம்விசை வந்து அவளை நித்திரையினின்று எழுப்பிவிடுவாள். அவள் தன்மேற் சாட்டிக்கொண்ட குற்றங்களில் மெய்யான தோஷத்தின் நிழல் முதலாயிருந்ததில்லை.

அவளுடைய ஆத்துமம் அநுபவித்துவந்த இம்மனக்கலக்கமும் குழப்பமும் அதிககாலம் நீடிக்கவில்லை. அசுன்தா சகோதரிக்கு இது மகா

பெரிய துன்பமாயிருந்தது. அவள் உண்மையாகவே ஓர் வேதசாட்சியின் வேதனையை அநுபவித்தாள் என்னலாம். தாம் விசேஷமாய் நேசித்துவரும் ஆத்துமங்களுக்குச் சில தருணங்களில் சேசுநாதர் இத்தகைய சோதனைகளை அனுப்புவது வழக்கம். அவர்கள், அவரால் நடத்தப்பட்டு சூரிய வெளிச்சத்தில் செல்லும்போது திடீரென காரிருள் அவர்களை மூடிக்கொள்கின்றது. அவர்கள் மிகவும் கருகலான இருட்டில் இருக்கிறார்கள். தம்மை அவர்கள் தேடி கூவி அழைக்கும்படியாகச் சேசுநாதர் தம்மை மறைத்துக்கொள்கிறார். இது உண்மையான நேசத்தைப் பரீக்ஷிக்கத்தக்க சோதனை. இது சாதாரணமாய் அதிககாலம் நீடிக்காது. திவ்ய சூரியன் மறுபடியும் அசுன்தா செல்லும் பாதையில் உதித்து எழும்பினதை அவள் விரைவில் கண்டாள். இச்சோதனையினின்று அவள் முன்னையைப் பார்க்கிலும் மிக்க பலமுள்ளவளாகவும் பத்தி சுறுக்குள்ளவளாகவும் வெளிப்பட்டாள்.

"அவள் சர்வேசுரனிடத்தில் மாத்திரம் சீவித்தாள் என்று காண்பது சுலபமாயிருந்தது. கோவிலில் அவளுடைய கண்கள் ஓயாமல் தேவநற்கருணைப் பேழையை அசையாது நோக்கிக்கொண்டிருந்தன. அவள் நமதாண்டவரைத் தன் சரீரக்கண்களால் கண்டாற்போல் தோன்றினாள். அவளுடைய மன அமைதியை எந்த இரைச்சலும் கலைக்கக்கூடவில்லை. வேலையின்போது முதலாய் அவள் செபிப்பதை நிறுத்திவிட்டவளல்ல. சீன பாஷையில் சில செபங்களைக்கற்றுக்கொண்டாள். அவைகளைச் சமையலறையில் தன் தோழியுடன் ஓயாமல் சொல்லிக்கொண்டேயிருப்பாள். தன் பக்திவேகத்தை ஒளிக்கக்கூடுமாயில்லை. சேசுவின்பேரில் அவள் வைத்தநேசம் அவளை முற்றும் ஆட்கொண்டது. அவளுடைய இருதயத்தையும், ஆத்துமத்தையும் அவளுடைய சிந்தனைகளெல்லாவற்றையும் நிரப்பினது."

அசுன்தா மோட்சத்துக்குப் போகவேண்டிய பக்குவகாலம் அடைந்தனள். அவளுடைய ஆத்துமம் இப்பூலோகத்தின் பாசத்தளைகளை அறுத்து ஒழித்து, மெய்யான பரமவீட்டிற்குப் பறந்துசெல்லும் காலம் சமீபித்தது. 1905-வருஷம் பெப்ரவரிமாதம் சீன தேசத்தின் பயங்கரமான சாட்டையென்றழைக்கப்படும் டைபஸ் என்ற கொள்ளைநோய் கன்னியரின் சிறிய மடத்தில் தலைகாட்டினது. அநாத பிள்ளைகளில் அநேகர் முதல்முதல் அச்சுரத்தால் பீடிக்கப்பட்டார்கள். அவர்களைக் கண்காணித்து ஆதரிக்கும்போது கன்னியரில் அநேகரையும் அந்நோய் தொற்றிக்கொண்டது. கன்னியரில் மெத்த பலசாலிகளும் யௌவனவயதுடையவர்களுமான விசுவாச மரிதாயார், ஆல்பெர்தோ மரிதாயார், பிலிப்பா மரிதாயார் இவர்கள் மூவரும் முதல் இப்பிணியால் உபத்திரவப்பட்டார்கள். மூன்றாவது குறிக்கப்பட்ட தாயார் வயதிலும் துறவற சீவியத்திலும் மற்றவர்களைப்பார்க்கிலும் அதிக யௌனமுள்ளவள். இவள்தான் மடத்தின் முதற் பலியாகத் தன் உயிரைக்கொடுத்தாள். கடைசி தேவத்திரவிய அநுமானங்களைப்பெற்று மார்ச்சு மாதம் 10-ம்தேதி தன் மரணத்தருவாயில் நித்தியவார்த்தைப்பாடு கொடுத்து, சேசு மரியே என்ற திவ்யநாமங்களை உச்சரித்துக்கொண்டே மகா அமரிக்கையாய் உயிர்விட்டாள்.

மார்ச்சு மாதம் 15-ம் தேதி அல்பெர்தோ மரிதாயார் வியாதியாய் விழுந்தாள். 24-ம்தேதி பிலிப்பா மரிதாயாரைச் சேர்ந்துகொள்வதற்காக பரலோகத்திற்குச்சென்றாள். கன்னியர் அவளுடைய மரண படுக்கையைச் சுற்றிக் காத்துக்கொண்டிருக்கும்போது அசுன்தா சகோதரிக்கு நோய்சண்டது. மிஷன்களுக்கு அவள் புறப்பட்ட முதல் வருஷாந்திர நாளான மார்ச்சு மாதம் 19-ம்தேதி அவளுக்குச் சுரம் தொற்றிக்கொண்டது. அநேக நாட்களாய் அவளுக்கு நல்ல சுகமில்லை. ஆனால் அவள் தன் ஒறுத்தலாலும், இக்கஷ்ட காலத்தில் மற்றவர்களுக்கு உதவியாயிருக்க வேண்டுமென்கிற ஆசையினாலும் வியாதியோடு தன்னால் கூடியமட்டும் போராடி அதை வெளியாக்காமலிருந்தாள். ஜுரம் அதிக்கிரமித்துப்போகவே, அவள் தன் படுக்கையை விட்டு எழுந்திருக்கக்கூடாமற்போயிற்று. ஆனால் சில மணிநேரங்களுக்குப்பின் தேகக்கொதிப்பு தணியவே, டாக்டர்கள் இதனை டைபாய்ட் ஜுரத்தின் சாந்தமான ஓர் தோற்றம் என்று கூறினார்கள்; அஞ்சத்தக்க குறிகள் இல்லாததினால் அசுன்தா ஆபத்தான ஸ்திதியிலில்லையென்று எண்ணினார்கள். ஆனால், ஆதியிலிருந்து, அவள் தேறிவிடுவாள் என்று மற்றவர்கள் கொண்ட நம்பிக்கை அவளுக்கில்லை. அவளுக்கு வியாதி கண்டவுடன் சிரேஷ்டதாயாரை அழைப்பித்து அவளிடம், "நான் இன்னும் சில தினங்களுக்குள்ளாக இறந்துவிடுவேன். கடைசித்

தேவத்திரவிய அநுமானங்களைப்பெற விரும்புகிறேன் ''—என்று கூறினள். சிரேஷ்ட தாயார் வியாதி சாந்தமுள்ளதாயிருந்ததினல் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாமென்று அவளுக்கு எச்சரித்தாள். ஆனல் அசுன்தா அதிகமாய்க் கெஞ்சி கேட்டுக்கொண்டதினல், அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்க வேண்டியதாயிற்று. குருவானவர் அழைக்கப்பட்டார். அவர் அசுன்தாவுக்கு பாவசங்கீர்த்தனம் கொடுத்தார். ஆனல் அவஸ்தைப் பூசுதல் கொடுப்பது அவ்வளவு அவசரமாகத் தோன்றவில்லை. வியாதியின் குணங்கள் அஞ்சத்தக்கதாகவில்லை. இவ்வாறு பல நாட்கள் கடந்தன. மெய்யாகவே அசுன்தா சுகப்படுவாள்போல் தோன்றிற்று. அவள் இருந்த பக்கத்து அறையில் அல்பெர்தோ மரி தாயார் மரணத்தருவாயிலிருந்தாள். அவள் சாகிறதினத்தில் அங்கே நடந்த பேச்சுகளையெல்லாம் அசுன்தா கேட்டுக் கொண்டிருந்தாள். தன்தோழி பிழைப்பதற்கு யாதொரு நம்பிக்கையுமில்லையென்று அறிந்துகொண்ட போது சிரேஷ்ட தாயாரை வரவழைத்து ''தாயாரே அல்பெர்தோ மரிதாயாருக்குப்பதிலாக நான் சாக விடை அளிக்கும்படி நமதாண்டவரை மன்றாட விரும்புகிறேன். அவள் சுகப்பட்டால், சபைக்கு எவ்வளவோ பிரயோசனமுள்ளவளாயிருப்பாள். நானே அதற்கு வெறும் சுமையா யிருக்கிறேனேயன்றி வேறென்ன? '' என்றான்.

அதற்குச் சிரேஷ்ட தாயார்:—''நாம் எதையும் கேட்கவுங்கூடாது, எதையும் வேண்டாமென்று சொல்லவுங்கூடாது. சர்வேசுரனுடைய சித்தத்தைமாத்திரம் நிறைவேற்றவேண்டும் '' என்று மறுமொழி பகர்ந்தாள். மறுநாள் அசுன்தா சகோதரி அவஸ்தைப் பூசுதலும் அவஸ்தை நன்மையும் வேண்டுமென்று கேட்டாள். ''நான் இன்னும் சில தினங்களுக்குள்ளாக மரிப்பேன். என் முழு சுய அறிவு இருக்கிறபோதே எல்லா தேவத்திரவிய அநுமானங்களையும் பெற ஆசிக்கிறேன். நான் மெத்த ஆவலாய் விரும்புகிற வரமதுவே '' என்று கூறினள். அவளுடைய மனதுக்குத் திருப்தியும் அமரிக்கையும் தருவதற்காக, டாக்டரும் அவளுடைய ஆத்தும குருவும் அவளுக்குக் கடைசி தேவத்திரவிய அநுமானங்களைக் கொடுக்கச் சம்மதித்தார்கள். கன்னியர் யாவரும் இந்த உருக்கமுள்ள சடங்கைப் பார்க்க ஒருங்குகூடினர்கள். அசுன்தா சகோதரி தான் துர்மாதிரிகை கொடுத்ததாகத் தன்மேற் குற்றம் சாட்டிக்கொண்டு அதற்கெல்லாம் பொறுத்தல் கேட்டாள். அவளுடைய குரல் சப்தம் எவ்வளவு தாழ்ச்சி நிறைந்ததாயிருந்ததென்றல், அங்கு கூடியிருந்தவர்களனைவரும் அதைக் கேட்டு மிகவும் சிந்தைகலங்கினர்கள். ''என் மிகவும் பிரியமுள்ள பிள்ளையே, நீ எங்களுக்குச் சகாயமாயும், ஆறுதலாயும் இருந்தாயே, சபையில் நீ எல்லோருக்கும் ஓர் மேல்வரிச் சட்டம்போல் இருந்தாயே, என்று சிரேஷ்ட தாயார் '' கூறினள்.

அசுன்தா திருச்சபையின் செபங்களுக்கெல்லாம் பதில் சொன்னள். கடைசிவிசை திவ்யநற்கருணையை சம்மனசுக்குரிய பக்தி வினயத்துடன் வாங்கினள். இச்சடங்கு முடிந்தபின் அவளுடைய நிலைமை சற்று மாறுதல் அடைந்தது. அவள் சாகிறதற்கு மெத்த ஆத்திரப்படுகிறாள். ஆனல் அது சர்வேசுரனுக்கு இஷ்டமில்லையென்று சொல்லி மற்ற கன்னியர் அவளைக் கேலிபண்ணினர்கள். அதற்கவள் ''இருந்தபோதிலும் ''சேசுநாதர் என்னைச் சீக்கிரத்தில் அழைத்துக்கொள்வார் என்று நினைக்கிறேன் '' என்று விடை பகர்ந்தாள் நமது சகோதரி. இதற்கு இணங்க, அவளுக்கு ஆபத்து நீங்கி விட்டதென்று எல்லோரும் அபிப்பிராயப்பட்டுக்கொண்டிருக்கையில், அசுன்தா மும்முரமான ஜுரத்தால் பீடிக்கப்பட்டாள். அதனுடன் அவளுக்கு புத்தி விகாரமும் சுய அறிவின்மையும் உண்டாயின. ஆனல் அவள் தன் புத்தி தடுமாற்றத்திலும் செபம் செய்யாமலிருக்கவில்லை. அவள் மெத்த வருத்தப்படும் நேரங்களில் உரத்த சத்தமாய் 'சேசுவே' என்று கூப்பிடுவாள். தேவமாதாவுக்குத் தன்னை ஒப்புவிப்பாள். தான் பெரிய பாவியென்று சொல்லிப் பாவப்பொறுத்தல் கேட்பாள். ஓர் நாள் இரவு அசைவில்லாமல் நெடுநேரம் ஏதோ ஒரு காட்சி காண்பது போல் தன் கண்களை ஒரு பக்கமாய்த்திருப்பி திடீரென தன்னருகே உட்கார்ந்துகொண்டிருந்த சகோதரியை நோக்கி ''சகோதரியே, துறவறத்தாருக்கு உத்தரிக்கிற ஸ்தலம் எவ்வளவு பயங்கரமுள்ளதென்று மாத்திரம் உனக்குத் தெரிந்திருக்குமானல் எப்போதும் பிரமாணிக்கமாயிருக்க ஜாக்கிரதையெடுத்துக்கொள் .. ..'' என்று கூறினள். ஒருவாரமுழுதும் அசுன்தா மெத்த அகோரமாய் வருத்தப்பட்டாள். வியாதியின் பயங்கரமான உபத்திரவங்கள் நீங்கின

தும் விரைவில் மெத்த பலவீனப்பட்டாள். தனக்குச் சுய உணர்ச்சி உண்டானவுடன் பாவ சங்கீர்த்தனம் செய்யவும் நன்மை வாங்கவும் முதல் முதல் கேட்டுக்கொண்டாள். மறுபடியும் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதம் பெற்ருள். ஆனுல் அவளுக்கு நன்மை கொடுக்க சாத்தியப்படவில்லை. ஏனென்ருல் அவள் ஒன்றையும் விழுங்கக் கூடுமாயில்லை. அதினுல் அவள் பட்ட வருத்தம் சொல்லத்தரமல்ல. குருவானவர் வெறும் அப்பத்தை எடுத்து, அதை அவள் விழுங்கக்கூடுமோவென்று அவளுக்குக் கொடுத்து பரீக்ஷித்துப்பார்த்தார். ஆனுல் அது சாத்தியப் படவில்லை.

ஆதலால் அவர் அவளுடைய ஆசையை சேசுநாதர் எற்றுக்கொள்வார் என்று அவளைத் தேற்றி, ஆசை நன்மை வாங்கும்படியாக புத்தி சொன்னுர். அவளுடைய வியாதியின் கடைசி தோற்றம் இன்னும் மெத்த வருத்த முள்ளதாயிருந்தது. பேசும் சக்தியை முழுதும் இழந்து விட்டாள். சைக்கினைகளால் தன் கருத்துக்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த முயன்ருள். அவள் சீனபாஷையில் "நற்கருணை, நற்கருணை" என்று தன் கடைசி வார்த்தைகளை உச்சரித்தாள்.

S. M.

(தொடரும்.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

பெங்களூர்
அர்ச். அன்னம்மாள் மதுவிலக்கு சபையின் 11-வது வருட மஹோத்ஸவம்.

நிகழாண்டு ஜூலைமீ 26உ சபையின் பரிபாலியாகிய அர்ச். அன்னம்மாள் திருநாளை முன்னிட்டு, 28-ம் தேதி ஆதிவாரம் காலை 6-மணிக்கு அர்ச். சவேரியார் கோவில் வாசகக்கூடத்தின் கண், ஷை தலைச்சபையாரும் அதன் கிளைச் சபைகளைச் சேர்ந்த மெம்பர்களனைவரும் ஒருங்குகூட, அங்கிருந்து வரிசைக்கிரமமாயணிவகுத்து, சபை துவஜத்துடன் அர்ச். சவேரியார் கோவிலடைந்து, திவ்யதிருப்பலி பூசைகண்டு, சபையோரனைவரும் கூட்டமாய்ச் சம்மனசுக்கள் திருப்பந்தியி லமர்ந்தனர். பூசை முடிவுபெற்றவுடன், சபையோர் வரிசையாயணிவகுத்துத் திரும்பி ஷை வாசகக்கூடம் சேர்ந்தவுடன், காலைபோஜன சிற்றுண்டி உதவப்பட்டு உபசரிக்கப்பட்டார்கள். உடனே ஜெபத்தோடு பொதுக்கூட்ட மாரம்பமாகி ஏறக்குறைய 400 மெம்பர்கள் தங்கள் சத்தியவாக்கைப் புதுப்பித்தானபின், அர்ச். அன்னம்மாள் பிரார்த்தனை சொல்லப்பட்டது. பிறகு சபை அக்ராஸனர் சங். இராஜரிஷி J. B. சர்வாங்தோன் குருஸ்வாமிகள் "சபையின் ஒழுங்கும் அதை யநுசரிக்கவேண்டிய முறையும்" என்னும் விஷயத்தின்மேல் தெள்ளியதமிழில் புத்திபோதனையாக வற்புறுத்தி யரிய பெரிய உபந்நியாசஞ் செய்தனர். உடனே சபைபொது காரியதரிசி கனம். K. ஜோஸேப்பு பிள்ளையவர்கள் சென்ற வருட (1917-1918) அறிக்கை (Report) வாசித்ததில் மெம்பர்களில் சிலர் பிரமாணிக்கந்தவறி மீண்டுத் தங்கள் பழய தீயப்பழக்கத்தைக் கொண்டது அதிக விசனத்துக்குரிய காரியமென்றும், அன்னவர்கள் சபையிலிருந்து நீக்கப்பட்டு விட்டார்களென்றும், மாதாந்தரக்கூட்டங்களுக்கு மெம்பர்களும் புரோமோட்டர்களும் வருவதில் அதிக அசட்டைசெய்வது, இத்தகைய அதியுத்தமசபையின் நன்னோக்கங்கள் ஈடேறவேண்டுமென்று விரும்புவர்கள் செய்யத்தக்க காரியமல்லவென்றும் குறித்துக்காட்டினர். இதை புரோமோட்டார்களும் மெம்பர்களும் அவசியம் கவனிக்கவேண்டியதென்று காட்ட இதன்பிறகு சபை கௌரவப்பொக்கிஷரதிபர் கனம் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளையவர்களால் இதற்கென்று எழுதப்பட்டு, சபையோராலும், கனம் C. A. அப்பாதுரை பிள்ளையவர்களுதவியாலும் அச்சுவாஹனமேற்றப்பட்டிருந்த "மதுவிலக்கு வினுவிடை" யென்னுஞ்சிறு புத்தகம் வாசித்து அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. (விலை 6 பை.) கடைசியாக புரோமோட்டர்களுக்குப் பூவாரஞ்சூட்டியபின் திருவிழா முடிபெற்றது.

இச்சபையிற் சேர்ந்து ப்ரமாணிக்கத்தில் நிலைத்த அநேகர் சுகஜீவியம்செய்து, நன்னெறியிலொழுகி மற்றையோர்களுக்குத் தூண்டுதலாயிருப்பதும், இச்சபையின் முக்கியஸ்தர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற "பெங்களூர் கத்தோலிக்கு ஐக்யநாணயசங்கம்" மிகவும் செழித்து ஏறக்குறைய 12 ஆயிரம் ரூபாய் இதுவரையில் கிறீஸ்

துவர்களுக்குக் கடனாகக் கொடுத்து பேருதவி புரிந்துவருவதும், ஷ அன்னம்மாள் மதுவிலக்குச் சபைக்குப் பெருமையும் அதிக கவுரவமுமென்று இங்கெடுத்துச்சொல்வது மிகையாகாவாம். ஆகவே, மதுவிலக்கி லவாகொண்ட உத்தமர்கள் இச்சபையில் சேர்ந்து நலம்பெற்றுப் பெருமையாக வாழ்வார்களாக!

அர்ச். அன்னம்மாள் மதுவிலக்கு
சபை நீடுவாழ்க!

கண்டுகளித்தோன்.

கோவாப்பரேடிவ் சோஸைட்டியும் சென்னை இந்திய பரோபகாரச் சங்கமும்.

சென்னை இந்திய பரோபகாரச் சங்கத்தின் 1916-வது வருஷத்தின் ஸ்தாபித அறிக்கைப் புத்தகம் ஒன்று என் பார்வைக்கு எட்டிற்று. பெரியோர்களும் கல்விமான்களும் புத்திசாலிகளும் சேர்ந்து, தலைச்சங்கமாகவும் கிளைச்சங்கங்களாகவும் நிலைபெறச்செய்து, எளிய கிறீஸ்துவ சகோதர சகோதரிகளைக் காப்பாற்றக்கொண்ட கருத்தானது நிலைப்பெற்றோங்குமென நம்புகிறேன். என்றாலும் நல்ல காரியத்திற்குப் பற்பல இடையூறுகள் நேர்வது சகஜம். மேற்படி சங்கம் கொண்ட கருத்தானது எளிதான காரியமல்ல. இக்கொடிய யுத்தகாலத்தில் ஜனங்களிடமிருந்து திரவிய சேகரஞ்செய்து காரியத்தை நடத்துதல் வெகு சிரமம். அன்றியும் உதாரகுணமுடைய தர்ம சீலர்கள்மாத்திரம் குறித்த நன்கொடையைக் கிரமப்படி செலுத்தினாலும் காரியம் கைகூடாது. ஒவ்வொருவரும் இல்லையென்னாமல் தத்தமக்கு இயன்றமட்டும் உதவினாலல்லாது யாதொரு பொதுக்காரியமும் ஈடேறுவது துர்லபம். அல்லாமலும், எளியவர்களிடமிருந்து திரவிய சேகரஞ்செய்ய இது தக்ககாலமல்ல. ஆனதால், சென்னை பரோபகாரச் சங்கத்தை நடத்துவதற்குத் தேவையான திரவிய உதவி கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியென்னும் கூட்டுறவு சங்கங்களிலிருந்து சுலபமாய்ப் பெறலாம். இதற்கு அத்தாட்சியாக பெங்களூர் கத்தோலிக்கு கொவாப்பரேட்டிவ் சொஸைட்டியின் 1917-வது வருஷத்தின் ரிப்போர்ட்டில் பிரசுரமான பின்காணும் குறிப்புகள் உதவலாகும்.

கடன்கொடுத்த விபரம்:—

ரூபா 4,642 பழைய கடன்களைத் தீர்க்க.
,, 2,330 கலியாணங்கள் நடத்த.
ரூபா 1,450 வீடுவாங்க, அல்லது மராமத்து செய்ய.
,, 300 விவசாயத்திற்காக.

1917-ம் ஞூ நத்திய லாபம் ரூபாய் 687-14-3, அடியில் கண்டபடி பாகிக்கப்பட்டது.

	ரூ.	அ.	ப.
100-க்கு 25 வீதம், ஆதார நிதிக்கு	171	15	7
மிச்சத்தில் 100-க்கு 10 வீதம் எளிய பிள்ளைகளின் வித்தைபயிற்சிக்கு	51	9	6
முழுதுமாய் செலுத்தப்பட்ட 1,034 ஷேர்களுக்கு 100-க்கு 7½ வீதமாக டிவிடென்டு ...	145	6	6
அர்ச். ராயப்பர் காசாக பரிசுத்த பிதாவுக்கு நன்கொடை ...	50	0	0
மெம்பர்களின் குடும்பத்தில் மரித்தவர்களுக்கு பூசைக்காக ...	10	0	0
கரடுகடன்கள் ஏற்படும் பட்சத்தில் ஈடுகட்டு மிஸல்லேனியஸ் பணடுக்கு ...	258	14	8
மொத்தம், ...	687	14	3

இதில் ஷேர் ஓல்டர்களுக்கு ஞாயமான வட்டியைக் கொடுத்து பிறகு மிச்சமான ரூ 542-7-9, தர்மகாரியமாகவும், பொதுக்காரியமாகவும் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. பெங்களூரில் சுமார் 30,000 கிறீஸ்துவர்கள்தான் இருக்கிறார்கள். அதிலும் இச்சங்கத்தில் 1917 ஞூ ஏப்பிரல் முதல் டிசம்பர் மாதம் வரையில் சேர்ந்தவர்கள் 333 பேர்கள்தான். இதில் முக்கால் பாகத்திற்கு மேற்பட மெத்தவும் எளிய கிறீஸ்துவர்கள். இவ்வளவு சொற்ப பேர்களிடமிருந்து நடத்திய சொஸைட்டியில் 9 மாதத்தில் கிடைத்த லாபம் ரூ 687—14—3 என்றால், பெங்களூரைவிட பன்மடங்கு விசாலம்பொருந்திய சென்னையின்கண் பெருந் தொகையினர் இத்தகைய கோவாப்பரேடிவ் சங்கத்தைச் சேர்ந்து அதை ஆதரிப்பார்களென்பதற்கும், ஷ பரோபகாரச் சங்கத்தின் கருத்துக்கள் நன்கு கடைத்தேறலாம் என்பதற்கும் ஆடங்கமென்ன? வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்? சென்னை பரோபகார சங்கத்தினரும் ஓர் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியை ஏற்படுத்தினால், ரூபாய்க்கு 4-அணா இரக்கமில்லாமல் அனியாய வட்டி வாங்கும் மார்வாடிகளிடமிருந்தும் சாவுகாரிகளிடமிருந்தும் எளிய கிறீஸ்துவ சகோதரர்களை விடுவித்து அதில் கிடைக்கும்

லாபத்தில் தங்கள் சங்கத்தை செழிப்புற நடத்த லாகுமென்பதை நான் சொல்லவேண்டுவ தில்லை.

ஓர் கிறீஸ்துவன்.

குருணுக்கல்.

அர்ச். பாப்பானவர் ஸ்தானாதிபதியின் விஜயம்.

சூரியப்பிரகாசத்திலு மதிகமாய் ஜொலித்துப் பிரகாசித்திலங்கும் சுத்த சத்திய வேதத்தின் அஷ்டதிசை எங்கும் வேத செங்கோலோச்சி ஆட்சிபுரியும் சிஷ்ட பாப்பரசரின் ஸ்தானாதிபதியாம் மகா மாக்ஷிமைதங்கிய வந்திக்கத்தக்க பீற்றர் புமாசோனி பயாந்தி ஆண்டகையவர்கள், நிகழும் மதி 17-ம் திகதி சனிவாரம் இவ்விலங்காபுரியின் தலை நகராகிய கொழும்பு மாநகரிலிருந்து புகைரதமேறிப் பிரயாணமாகி, பொன்காவல் ஜங்ஷனிலிருந்து மோர்டோர் ரதமார்க்கமாய் அவர்களது காரியதரிசிகளுடனும் இன்னுமிரு குருக்களுடனும் அன்று சாயரக்ஷை 5½-மணியளவில் பரதகுல வர்த்தகர்களால் வெகு விசித்திர விநோத அலங்காரமாய் சிங்காரித்துத் தயாரிக்கப்பட்டிருந்த பந்தலில் வந்திறங்கி, பலவர்ணத் துவஜங்களேந்தி முன்பின் செல்ல, சங்கீத தொனிகள் மறுபக்கம் தொனிக்க, பல விடங்களிலிருந்துவந்த ஜனங்கள் புடைசூழ்ந்தேக, பவனி மேரையாய், இந்நகர்வாசிகளால் பகு சாமர்த்தியமாய் நிர்மாணிக்கப்பட்ட மகர தோரணத்தின் வழியாக சந்தானாள் தேவாலயம் சென்று, தமது அப்போஸ்தலிக்க ஆசீரளித்தனர். உடனே நகரவாசிகளால் ஓர் சிறந்த வந்தனோபசாரப் பத்திரிகை வாசித்தானதின்பின், ஓரருமைவாய்ந்த பிரசங்கம்செய்யப்பட்டதும் திவ்யநற்கருணை ஆசீர்வாதம் கொடுபட்டு மோதிரம் முத்திசெய்து அன்று ஜனங்கள் கலைந்தனர். மறுதினமாகிய ஆதித்தவாரதன்று 8½-மணிக்கு இரு குருக்கள் உதவிபுரிய, ஆண்டகைகள்பூசை பகு பக்தியாய் நடைபெற்று முகிந்தது. அன்றுமாலை பரதகுலத்தவர்களால் வாசம் வீசும் நறுமண மலர்களால் ஆரமிடப்பட்டு ஓர் வந்தனோபசாரப் பத்திரிகை வாசிக்கப்பெற்றது. உடனே அதற்குத் தகுந்த பதிலளித்ததும், இவர்களின் சரிதையை இளம்பிராயமுதல் நன்கு அறிவதாயும், இவர்கள் ஜாதியர் இகபர நன்மைக்காய் ஜெபத்திலும் உழைப்பிலும் ஒருபோதும் பின்வாங்குவதில்லை, என்றும் உறுதிமொழி மொழிந்தனர். 19-ம் திகதி அனாதசாலை, ஆண்பாடசாலை, பெண்பாடசாலை, மடங்கள், இவ்விடங்களுக்குப் பிரசன்னமாகி முறையே சகல உபசரணையும் பெற்று திருப்திகரமாகினர். அன்றும், மறுதினமும் சுற்றுப்பக்கங்களிலுள்ள தேவாலயங்களைத் தரிசித்து 20-ம் திகதி இரவு 9-45 மணிக்கு புகைரத மார்க்கமாய் இந்தியாவுக் கேகுமிடையில், தமது காரியதரிசிகளுடனும் சங். ஷார்வேல் சுவாமிகளுடனும் யாழ்ப்பாணம் யாத்திரையாகினர். ஆண்டகையவர்கள் தமது ஸ்தானத்தை இந்தியாவில் ஸ்தாபித்துக்கொண்டதானது இந்திய கிறீஸ்துவர்களுக்கு வெகு சலாக்கியத்தையும் பெரும் நன்மையையும் பயக்குமென்பதிற் கையமில்லை. அருளே உருவாகத்தோன்றும் இவ்வாண்டகைக்கு பலத்த சுகத்தையும் நீடிய ஆயுளையும் கொடுத்தருளத் திருவருளைச் சதா சிந்திக்கின்றனன்.

Kurunegala, 21—8—18.

இங்ஙனம்,
ஓர் பரதன்.

ஆரம்பாக்கம் மோட்சமுடி விராக்கினியின் வருஷாந்திர உற்சவம்.

1918 வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 10-ம் தேதி சென்னை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த ஆரம்பாக்கத்து கோவிலில் கொடியேற்றம் செய்து 8-நாள் காலையில் 6-மணிக்கு பூசையும் மாலையில் மாதா பிரார்த்தனையும் திவ்யநற்கருணை ஆசீர்வாதமும் நடந்தது. 17-ம் தேதியாகிய சனிக்கிழமை மாலை 7-மணிக்கு பெரிய வெஸ்பராவும் தேர் சுற்றுப்பிரகாரமும், வெளி மைதானத்தில் சங்கைக்குரிய எஸ்.எம்.எப். இன்னய்யநாத சுவாமிகளால் தமிழ் பிரசங்கமும் செய்யப்பட்டது. மறுநாள் காலை 7-மணிக்கு சங்கைக்குரிய யெப். கோபர்டாட் சுவாமிகளால் பாட்டுபூசையும், இங்கிலீஷில் பிரசங்கமும் செய்யப்பட்டு திவ்யநற்கருணை ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டு திருவிழா முடிவுபெற்றது.

இப்படிக்கு,
கண்டு மகிழ்ந்தோன்.

[இடமிலா குறைவால் இதர கடிதங்கள் பிரசுரிக்கப்படவில்லை. அடுத்த மாத சஞ்சிகையில் அவைகள் பிரசுரிக்கப்படும். ப.—ர்.]

நீ காண்கிற காரியங்களிற் சில சர்வேஸ்வரனுக்கு ஊழியஞ்செய்ய உதவியாகவும், சில உன்னைத் தேவ ஊழியத்திலிருந்து நீக்கிவிடுகிறதாகவும் நினை.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாச்சாரம்.

ஓர் ஆகாய க்ப்பலோட்டி.—பிராஞ்சு தேசத்தில் ஓர் ஆகாயக் கப்பலோட்டி 5-மணிநேரத்துக்குள்ளாக 530-மைல் தூரம் பறந்துசென்றதாகச் சொல்லப்படுகிறது.

ஓர் விபத்து.—ஜப்பான் தேசத்து சண்டைக்கப்பல் ஒன்று துறைமுகத்தில் நின்றுகொண்டிருக்கையில் யாதுகாரணத்தினாலோ வெடித்து 700 பேருடன் மூழ்கிப்போயிற்று.

ஜெருசலேம்.—இப்புண்ய க்ஷேத்திரத்தில் தற்போதுள்ள ஜனத்தொகை 75,000. இவர்களுக்குள் யூதர் 50,000; மகம்மதியர் 10,000; கத்தோலிக்கர் 5,000; புரோடான்டாரின் பல வகுப்பினர் 10,000.

பொன் நாணயங்கள்.—புது பொன் நாணயங்களை உருக்குகிறவர்களுக்குக் கடினமான தண்டனை விதிக்கப்படுமென்று சர்க்கார் சட்டம் ஒன்று வெளியாயிருக்கிறது.

கிறீஸ்துவ தொழிலாளிகளின் சங்கம்.—இச்சங்கத்தார் பெல்ஜியத்தில் கூடி செய்த தீர்மானம் யாதெனில்: நிகழும் யுத்தக்கடைசியில் ஐரோப்பாவின் காரியாகாரியங்களை ஒழுங்குபடுத்தும்பொருட்டு கூடவிருக்கும் சங்கத்துக்கு அர்ச். பாப்பானவரையும் வரவழைக்கவேண்டுமென்பதேயாம்.

சேசு சபைக் குருக்கள்.—போர்முனையிலுள்ள போர்ச்சேவகர்களுக்கு விசாரணைக் குருக்களாய் 72 சேசு சபைக் குருக்கள் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறார்கள். சில வாரங்களுக்கு முந்தி வேறே 11-பேர் சேசு சபைக் குருக்கள் அனுப்பப்பட்டார்களென்று தெரியவருகிறது.

அமெரிக்க சைன்யம்.—நமது பிரிடிஷ் இராஜாங்கத்துக்கு உதவியாக இப்போது மேற்கு யுத்தகளத்தில் வந்து போர்செய்யும் அமெரிக்கப் படையில் இதுவரையில் சம்பவித்த அவமிருத்துக்களின் மொத்தம் 7,315 என்றும், இவைகளில் மரணம் 2,927 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

யுத்தமும் சேசு சபை சர்வகலாசாலையும்.—அமெரிக்காவில் சேசு சபையாரால் நடத்தப்படும் ஒரு சர்வகலாசாலையில் வைத்திய சாஸ்திரம் படித்துக்கொண்டிருக்கும் வாலிபர்களுக்குள் 843-பேர் யுத்த முனைக்குப் போயிருக்கிறார்கள். இப்போது இன்னும் 500-பேர் யுத்தத்துக்குப் போக ஆயத்தமாயிருக்கிறார்கள்.

அர்ச். சவேரியார்.—ஜப்பான் தேசத்தில்வேதம்போதித்தகாலத்தில் ஒரு பள்ளிவாசலும் அதைச் சுற்றிலுமுள்ள விஸ்தாரமான ஸ்தலமும் ஒரு இராஜ பிரபுவால் அவருக்கு இனாமாக அளிக்கப்பட்டது. ஆனால் அர்ச்சியசிஷ்டவர் மரணமானபின் அத்தேசத்தில் வேதகலகமுண்டானபோது, சத்தியவேதக் குருக்கள் ஜப்பானிலிருந்து சர்க்காரால் துரத்தப்பட்டார்கள். அப்போது மேற்படி பள்ளி வாசல் வேறொருவனுடைய வசமாய்விட்டது. சங். வில்லியன் என்னும் அன்னிய தேசத்துக் குருவானவர் ஒருவர் இப்போது அந்த ஸ்தலத்தைக் கண்டுபிடித்து அதை விலைக்கு வாங்கிவிட்டார்.

போர்த்துகால்.—இத்தேசத்தில் சில வருஷங்களுக்குமுன் தேச கலக முண்டானபோது புத்தித் தடுமாற்றமுற்றிருந்த சர்க்கார் கத்தோலிக்கு வேதத்துக்கு விரோதமாய்ப் பல குரூர சட்டங்களை ஏற்படுத்தி, மேற்றிராணிமாரை அத்தேசத்தினின்று துரத்திவிட்டு, குருக்கள், சந்நியாசிகள், கன்னியர் முதலியவர்களையும் சிறைப்படுத்தி தேவாலயங்கள், மடங்கள் முதலியவற்றைத் தம் வசமாக்கிக்கொண்டார்களல்லவா? ஆனாலிப்போது புது சர்க்கார் ஏற்பட்டு, பரதேசத்திலிருந்த ஷை மேற்றிராணிமார்களை வரவழைத்து, குருக்களையுஞ் சிறையினின்று விடுதலைசெய்து, தேவாலயங்கள் முதலிய திரு ஸ்தலங்களை தேவாராதனைக்காக விட்டுவிட்டு, முன்போல சுற்றுப்பிரகாரம் முதலிய வேத சடங்காசாரங்களை நடத்தும்படி உத்தரவு அளித்திருக்கிறார்கள். சீக்கிரத்தில்போர்த்துகால் தேசம் தன் ஸ்தானாதிபதியை அர்ச். பாப்பானவரிடமனுப்பி, திருச்சபையின் முகாந்தரமாக யாதோர் ஒழுங்கு திட்டம் ஏற்படுத்திக்கொள்ளுமென்று பத்திரிகைகள் கூறுகின்றன.

சவரன்கள்.—இவை, பம்பாயிலுள்ள இராஜாங்க தங்கசாலையில், ஆகஸ்டுமீ 16-ம் தேதி முதற்கொண்டு அச்சடிக்கப் பட்டுவருகின்றன. கூடிய சீக்கிரத்தில் அவை வெளிக்குவருமென்று எதிர்பார்க் கப்படுகிறது. இந்த தங்க நாணயத்தை யாவது, வெறெந்த நாணயத்தையாவது, அதன்மேல் அச்சடிக்கப்பட்டிருக்கிற கிர யத்துக்கு மேற்பட்ட தொகைக்கு விற்கப் படாதென்றும், அப்படி விற்பவர்கள் சிக்ஷிக்கப்படுவார்களென்றும், கவர்ண் மென்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறூர் கள். அவ்வுத்தரவு காலக்கிரமத்தில் கவர்ண் மென்ட் கெஜட்டுகளில் பிரசுரிக்கப்படும். இதையறிந்த சென்னைச் சாவகாரிகள் சிலர் ஏற்கெனவே 19, 20-ரூபாய்க்கு விற்று வந்த சவரனை 17, 18-க்குக் கொடுக்கிறூர் களாம்.

"மதுவிலக்கு வினுவிடை." எனும் பெயரிய சிறு புத்தகமொன்று எமது பார் வைக்கு அனுப்பப்பட்டது. அதை இடை யாறு விருப்பத்துடன் முழுதும் வாசித் தோம். மதுபானத்தால் மானுடராசிக்கு வருவனவாகிய தீமைகளெல்லாம் பற்றும் பற்ருய் இதில் செவ்வனே விளக்கப்பட்டி ருக்கின்றன. மதுபானக் கேடுகளைப்பற்றி பல்லோர் பன்மாதிரி வரைந்துள்ளார். இப் போது நாம் குறித்துப்பேசும் புத்தகத்தை யெழுதிய பெங்களூர் அர்ச். அன்னம் மாள் மதுவிலக்கு சபையின் கௌரவ பொக்கிஷதாரராகிய ஸ்ரீமான் சி. எஸ். ஞானப்பிரகாசம் பிள்ளை யவர்கள் உள் ளன்புடன், சிரமம் பாராது ஷை தின்மை களை, கற்ரேரு மற்ரேரும் எளிதிலுண ரும்படி வினுவிடையாய், நல்ல ஒழுங்கு வரிசையாய், தெள்ளிய நடையில், வாசிக் கும்போதே அதன் கருத்துக்களை மனத் தில் பசுமரத்தாணிபோல் பதியத்தக்க விதமாய் விவரித்துள்ளார். இவர் செய் துள்ளது பரோபகாரத்தில் பேருபகார மாம். இப்புத்தகம் குடியரும், குடியரல் லாதாரும், ஆண்களும், பெண்களும், வால ரும் விருத்தரும், அனைவோராலும் அவசி யம் பன்முறை வாசிக்கப்படத்தக்கது. ஷை பிள்ளையவர்களைப்போல் பரோபகார சிந் தையுடைய கனதனவான்கள் யாராவது முன்வந்து இப்புத்தகத்தை ஏராளமாய் அச்சிட்டு, தமிழ் நாடெங்கும் வீடுவீடாய் இலவசமாய் வழங்கும்படி செய்வார்களா ஞல், உலோகோபகாரமாகும். இதன் விலை அரையணுவாகும். பெங்களூரிலிருக்கும் ஷை சபையின் கௌரவ பொக்கிஷதார ராகிய ஸ்ரீமான் எஸ். ஞானப்பிரகாசம் பிள்ளைக் கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

3-நாளில் 14,000 கைதிகள்.—"புலி தூங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்" எனச் சொல்வார்கள். அத்தன்மைபோல, நமது பிரிடிஷ் இராஜ்ஜியத்துக்கும் ஜெர் மனியாவுக்கும் இப்போது நடந்துகொண் டிருக்கும் மகா யுத்தத்தில், இதுவரையில் ஜெர்மனியார் ஒருவாறு மேற்கையாகவும், ஐக்கிய கட்சியார் கீழ்க்கையாகவுமிருந்து வந்தார்களல்லவா? இப்போது ஜெர்மனி யருக்கு இறக்குமுகமாய்விட்டது. புறங் காட்டியோடத் தலைப்பட்டுவிட்டனர். நமது ஐக்கிய சேனைகள் மேலும் மேலும் ஏறிச்சென்று எதிரிச் சேனைகளைத் தாக்கி முறியடித்துக்கொண்டுவருகின்றன. சமீ பத்தில், இரண்டு வாரத்தில் 360,000 கைதி களையும், 1,200 பீரங்கிகளையும் நமது வீரர் கைப்பற்றினரென்று சங்கதி யெட் டியது. இவ்வெற்றியைப்பற்றிய விளம்ப ரங்கள் ஊரெங்கும் சுவர்களில் ஒட்டப் பட்டன. இப்போது மூன்றே நாளில் பதினுலாயிரங் கைதிகள் பிடிபட்டன ரென்று யுத்தகளத்திலிருந்து சமாசாரம் வந்திருக்கிறது. இது துவக்கமாக இனி நமது இராஜாங்கத்துக்கு வெற்றிமேல் வெற்றி கிடைக்க, சத்துருக்கள் கொஞ் சத்துக்குள் முற்றிலும் முறியடிக்கப்படு வார்களென்று எண்ணுவதற்கு ஏது வுண்டு. "குடலறுந்த நரி யெவ்வளவு தூரம் ஓடும்?"

ஜவுளி சரக்குகளின் விலை.—ஐரோப்பா யுத்தகாரணமாய் விளைந்த பல அசௌகரி யங்களில், துணிமணிகளின் விலையேற்ற மொன்றல்லவா? விசேஷமாய் ஏழைகளை பாதிக்கு மித் துணிக்கஷ்டத்தை நிவர்த் திக்க, கவர்ண்மென்டார் முயற்சியெடுத்தி ருப்பதாகத் தெரிகிறது. சாமானிய ஜனங் களுக்கு அதிகமாய்ப் பிரயோசனமாகும் துணி தினுசுகள் விஷயமாய் இந்தியாவில் துணி நெய்யும் எல்லா யந்திரசாலைகளுட னும் கவர்ண்மென்டார் ஒப்பந்தஞ் செய்து கொண்டு, தாங்களாவது, தங்களிடம் இதற்கென்று லைசென்ஸ் பெற்ற வர்த்த

-கர்களைக்கொண்டாவது தாங்கள் குறிக்கும் ஞாயமான விலைக்கு ஷை துணிகளை விற்கும்படி எத்தனஞ் செய்துவருகிறார்கள். இதன் விஷயமாய் வேண்டிய விசாரணைகள் செய்து, காரியத்தை முடிவுக்குக் கொண்டுவரும்பொருட்டு, மிஸ்டர் எப். நாயிஸ் என்னும் சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உடலை மூடும் வஸ்திர விஷமாய் இவ்வாறு முயற்சியெடுத்த காருண்ய கவர்ண்மென்டார், ஏழைகள் வயிற்றை நிரப்பும் தானிய தவசங்களின் விலையைக் குறைக்கவும் ஏற்பட்டார்களானால், ஏழைகளுக்கு எவ்வளவோ சகாயமாயிருக்கும்! கவர்ண்மென்டார் இவ்விஷயத்தையுங் கவனிப்பார்களெனக் கோருகிறோம்.

பிரியதத்த மந்திரம்.—இம்மந்திரம் நாம் இப்போது வழங்குகிற மாதிரி, கர்த்தர் பிறந்த 1515-ம் ஷூ த்திலிருந்துதான் வழங்கப்பட்டது. "பிரியதத்தத்தினால் பூரண மரியாயே வாழ்க" என்பது கபிரியேல் சம்மனசானவர் கன்னிமரியாயிக்கு சொன்ன மங்கள வாழ்த்துதல். "பெண் சாதிகளுக்குள்ளே ஆசிர்வதிக்கப்பட்டவள் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப் பட்டவருமாமே." என்பது அர்ச். எலிசபெத்தம்மாள் மினவியபோது சொல்லியது. இம்மட்டுந்தான் 15-வது நூற்றாண்டு வரைக்கும் வழங்கிவந்தது. "அர்ச். மரியாயே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் ஆமென்சேசு" என்பது 1508-ஷூ த்தில் சேர்க்கப்பட்டது. "இப்பொழுதும், எங்கள் மரண நேரத்திலும்" என்பது அர்ச். ஐந்துகாய பிரான்சீஸ்கு சபையாரால் வழங்கிவந்தது. சில வருஷங்களுக்குப் பிறகு, அதாவது 1515 ஷூ த்தில் ஐந்தாம் பத்திநாதராகிய அர்ச். பாப்பானவரால் இந்த வசனங்கள் முழுமையும் அங்கீகரிக்கப்பட்டன. இம்மந்திரத்தின் முதற் பாதியை, திரிகாலச் செபமாக 1090ஷூ இரண்டாவது உர்பான் பாப்பானவரால் கோவில் மணியடிக்கும்போது சொல்லும்படி திட்டப்படுத்தப் பட்டது.

சகோதரக் கொலை.—பின் குறிக்கப் பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தன் சகோதரனைக் கொலைசெய்ததற்காக, கணபதியா பிள்ளை என்பவனுக்கும், அவனோடு அத்தீச்செயலுக்கு உடந்தையாயிருந்த இருவருக்கும் திருநெல்வேலி செஷன்ஸ் கோர்ட்டார் மரணத்தீர்வை யிட்டார்கள்: அண்ணனுக்கும் தம்பிக்கும் பிதிரார்ச்சித சொத்து பாகிக்கப்பட்டது. பாகமான சிறிது காலத்துக்குள் தம்பியானவன் தன் பாகத்துக்குவந்த சொத்துக்களையெல்லாம் தாறுமாறாகச் செலவிட்டு ஓட்டாண்டியானான். அண்ணனுக்குச் சந்ததியில்லாததால் அவன் இறந்துவிட்டால் அண்ணன் சொத்துக்களை தான் தாராளமாய் அநுபவிக்கலாமென்ற எண்ணங்கொண்டவனாய், அவனைக்கொல்ல சூழ்ச்சி செய்தான். அண்ணனுக்கு ஆகாத ஆசை காட்டி, அவனை அவ்வூருக்கு வெளியே அழைத்துப்போய், அங்கே யாருமில்லாத சமயத்தில் அவனை ஒரு குளத்தில் தள்ளி அவனுக்கு உயிர்போமளவும் அவனைத் தண்ணீருக்குள் அமுக்கிக்கொண்டிருந்து, உயிர்போனபின் அப்பிரேதத்தை அக்குளத்திலேயே விட்டுவிட்டு வந்துவிட்டான். அண்ணன் ஏதோ குளிக்கவந்த விடத்தில் தவறி விழுந்திறந்தானென்று எண்பிக்கிறதற்காக இப்படிச் செய்தான் சண்டாளன். அண்ணன் சொத்தை அபகரித்து அநுபவிக்க எண்ணிச்செய்த அடாதசெய்கையினால் படாதபாடுபட்டுத் தூக்கிலிறக்கும்படியாயிற்று. தானொன்று நினைக்க, தெய்வமொன்று நினைத்தது.

ஜெர்மன் சக்கரவர்த்திக்கு நெருங்கின உறவுள்ள ஒரு வாலிபன்.—ஜெர்மனியர் பெல்ஜியத்தின்மேல் படையெடுத்து அத்தேசத்தில் நடத்திய யுத்தத்தில் ஒரு குன்றுக்கருகில் கடினமான சண்டையொன்று நிகழ்ந்தது. அப்போது இருதாரத்தாரிலும் அநேகர் கொல்லப்பட்டார்கள். இக்குன்றுக்குச் சமீபத்தில் "திராப்பிஸ்ட்ஸ்" என்று சொல்லப்படும் சந்நியாசிகளின் மடமொன்றுண்டு. இச்சபை சந்நியாசிகள் ஒருவரோடொருவர் பேசாமல் எப்போதும் கண்டிப்பான மௌனம் அநுசரிக்க வேண்டியவர்களா யிருப்பதுமல்லாமல், கடினதவம் புரிந்து கஷ்ட வேலையும் செய்கிறவர்களாவர். இவர்கள் தங்கள் மடத்துக்கருகில் நடந்த இந்தச் சண்டையில்

இறந்துபோனவர்களை நல்லடக்கஞ்செய்
தும், காயம்பட்டவர்களை ஜாக்கிரதை கவ
லையுடன் பராமரித்துச் சவரட்சணைசெய்
தும்வந்தார்கள். அங்கு கீழேவிழுந்து
கிடந்தவர்களில் ஒரு ஜெர்மன் வாலிபன்
மரணாவஸ்தையாயிருப்பதைக்கண்ட அம்
மடத்து சிரேஷ்டர், அவனுக்குத் தம்மா
லான உதவி சகாயஞ் செய்தும் அவன்
இறந்துபோனான். அவன் ஜெர்மன் சக்
கரவர்த்திக்கு நெருங்கின இரத்தபாத்திய
முள்ளவனென்று அறிந்த அந்த ஊர்
விசாரணைக் குருவானவர் அவன் பிரே
தத்தை ஓர் இடத்தில் அடக்கஞ்செய்
வித்தார். இதைக் கேள்விப்பட்ட ஜெர்
மன் சக்கரவர்த்தி ஷை குருவானவரிடத்
துக்குத் தம் தூதர்களை அனுப்பி, அந்த
வாலிபன் அடக்கஞ்செய்யப்பட்ட
இடத்தை அவர்களுக்கு அறிவிக்கும்படி
கேட்டுக்கொள்ளவே, அதற்குக் குருவான
வர் ஜெர்மனியர் பெல்ஜியத்தை விட்ட
கன்று, அவர்களால் அத்தேசத்துக்குண்
டான சகல நஷ்டங்களையும் தக்கபடி பரி
கரித்தால்தான் அவர்களுக்கு அந்தக் கல்
லறை காட்டப்படுமென்று சொல்லி அவர்
களை யனுப்பிவிட்டாராம்.

சங். கோலமாரி ஜோசேப் சுவாமிக
ளின் தேகவியோகம்—இந்த குருவான
வர் மரணமான துக்க செய்தியை மிக்க
விசனத்துடன் நமது நேயர்களுக்கு அறி
வித்துக்கொள்ளுகிறோம். சென்னை அதி
மேற்றிராசனத்தைச் சேர்ந்த இவர் நெல்
லூர் ஜில்லாவிலுள்ள பிட்ரகுண்டா பங்கு
சுவாமியாராவர். இவர் கடந்த 2 வருஷ
காலமாக மிக்க சுகவீனப்பட்டிருந்தபடி
யால், பெரியோர் உத்தரவின்படி தம்மு
டைய பங்கு விசாரணை வேலையை விட்டு
விலகி, சென்னைக்குவந்து வைத்தியஞ்
செய்துகொண்டு, மண்ணடி, அர்ச். சவேரி
யார் கோவில் அறைவீட்டில் சென்ற 8
மாதங்களாக தங்கியிருந்தார். இவருக்
குண்டாயிருந்த வியாதி என்னவென்று
வைத்தியர்களால் செவ்வையாய்க் கண்டு
பிடிக்கப்படவில்லை. ஆயினும் இவர் தெய்
வச் சித்தத்துக் கமைந்தவராய் தம்மாற்
கூடியபோதெல்லாம் திவ்யபூசை செய்து
கொண்டு வந்ததுமல்லாமல், பாவசங்
கீர்த்தனம், ஞானஸ்நானம், அவஸ்தைப்
பூசுதல் முதலிய தேவத்திரவிய அநுமா
னங்களை நிறை வேற்றுவதில் மேற்படி
கோவில் விசாரணை சுவாமிகளுக்கு உதவி
யும் புரிந்துவந்தார். சென்றமீ 25-ம் உ
ஞாயிற்றுக்கிழமை இரவு இராப்போசனம்
அருந்திவிட்டு, வழக்கம்போல் நித்திரை
செய்தவர் விடியற்கால நேரத்தில் (Ap-
poplexy) ஒருவித கபால ஜன்னியினால்
அவஸ்தையாயிருக்கக்கண்டு, கடைசி
தேவத்திரவிய அனுமானங்களை யளிக்கப்
பெற்று, 26உ திங்கட்கிழமை காலை 10-
மணிக்கெல்லாம் பரலோக பிராப்தியாயி
னர். மறுநாள் காலை 7-மணிக்கு மி. சங்.
சென்னை அதிமேற்றிராணியாரவர்கள்
இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக
பெரிய பாடற்பூசைசெய்தபிறகு 20 குருப்
பிரசாதிகளுடனும் பெருந்திரளான ஜனங்
களுடனும் இவரை ஆரவாரச் சிறப்பாய்
நல்லடக்கஞ்செய்தார். இவர் குண்டூர் ஜில்
லாவைச்சேர்ந்த பீரங்கிபுரமென்னு மூரில்
ரெட்டிமார் குலத்தில் பிறந்து, நெல்லூரி
லிருந்த குருமடத்திற் படித்து, 1896-ம்
ஆண்டிற் குருப்பட்டம் பெற்று, கடந்த
22-வருஷங்களாக ஆத்துமங்களின் இரட்
சண்யத்துக்கு அதிக முயற்சி பிரயாசை
யுடன் நெல்லூர், குண்டூர் ஜில்லாக்களி
லுள்ள பல கிராமங்களில் விசாரணை
செய்துவந்தார். பிட்ரகுண்டாவில் ஒரு
நேர்த்தியான கோவிலும் அறைவீடும்
கட்டிமுடித்தார். இவருக்கு சர்வேசுரன்
நித்திய இளைப்பாற்றியைத் தந்தருள்
வாராக.

சென்ற ஆகஸ்டுமீ 4-ம் தேதி.—இந்த
நாளானது ஆங்கிலேய அரசாட்சியார் நிக
ழும் யுத்தத்தில் கைகலந்ததின் 4-வது
வருடாந்திர நாளென்று நண்பர்களறிவார்
கள். அன்றையத்தினம் இந்தியாவிலும்
ஆங்கிலேய அரசாட்சியுள்ள எல்லாவிடங்
களிலும் நமது சக்கரவர்த்தி ஜார்ஜ் அரச
ரின் அபீஷ்டத்தின்படி விசேஷ தேவாரா
தனை நடத்தப்பட்டு, சீக்கிரத்தில் சமாதா
னமும் ஜெயமுமுண்டாகவேண்டுமென்று
சகல பிரஜைகளும் சர்வேசுரனைப் பிரார்த்
தித்தார்கள். ஆனால் பிராஞ்சு அரசாட்சி
யாரோ இத்தகைய ஆராதனையையும்
பிரார்த்தனையையும் கனவிலும் நினைத்த
வர்களல்லபோலும். அத்தேசத்திய பிரஜை
களோவெனில் தங்கள் மேற்றிராணிமார்க
ளுடையவும் குருக்களுடையவும் பிரேரே

பணையின்படி அந்த நாளை ஜெப தவத்தில் செலவழித்து தேவ இரக்கத்தை இரந்து கேட்டுக்கொண்டார்கள்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக்கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ருபாயும், முழுக்கலத்துக்கு 4-ருபாயு மாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

இரங்கூன்.

சென்னை, பெரியமெட்டில் வசித்த கனம் சின்னையா அவர்கள் களத்திரமும், ஆறுமுகம் பீற்றரவர்களின் தமக்கையாரும், இரங்கூன் நகரின்கண் வசிக்கும் டாக்டர் C. M. மெக்கேல் பிள்ளை அவர்களருமைத் தாயாருமாகிய ஸ்ரீமதி அஞ்ஞீரா ஆரோக்கியம் அம்மாள் கொஞ்சம் அசௌக்கியமாக இருந்ததை டாக்டர் மெக்கேல் பிள்ளை கண்டு தன் மாதாவிற்கு திருச்சபை ஆசாரத்தின்படி சகல ஞானகாரியங்களையும் நடத்தினபின், நிகழும் 1918-ம் ஸு ஜூலைமீ 2-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 3-30 மணிக்கு "சேசு மரியே சூசை துணை" யென சொல்லிக் கொண்டே தம் 79-ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தனள். அன்று மாலை 5-30 மணிக்கு இரண்டு அஸ்வம்பூட்டிய ரதத்தில் பிரேதத்தை பெட்டியுடன வைத்து, நமது டாக்டர் அவர்கட்கு தெரிந்த கனதனவான்களும், தெரியாதவர்களும் சுமார் 400-பேர் வரையில் ரதத்தினருகே புடைசூழ்ந்துவர, பசுமந்தான் கத்தோலிக் ஸமேலியம்மாள் கல்லறையினருகே ரதம் வந்தவுடன் ஆங்கு அர்ச். அந்தோனியார் ஆலயத்தின் குருதேசிகராகிய J. B. மூர்லான் சுவாமியார் அவர்களால் திருச்சபை ஆசாரத்தின்படி பாடல் பிரார்த்தனையுடன் அந்தம்மாளின் சரீரம் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. ஜூலைமீ 17-ம் திகதி புதவாரத்தன்று காலை 6-30 மணிக்கு, ஷை ஆலய விசாரணை குரு ஸ்வாமிகளால் ஷை அஞ்ஞீரா ஆரோக்கிய அம்மாள் ஆத்தும இளைப்பாற்றிக்காக பெரிய பாடல்பூசையும், தூம்பா மந்திரிப்பும் நடத்தியதுமன்றி, காலை 10-மணிக்கு டாக்டர் அவர்களுடைய மாளிகையில் ஜெப ஆராதனையும், பந்தி போஜன வுபசரிப்பும் நிறைவேறின. பிறகு காலையில் மகா வித்வசிங்கம் வீ. அ. இராமச்சந்திர புலவரவர்களால் "சஞ்சலப்பா மாலை" யின்பேரில் சங்கீத காலக்ஷேப முதலியவை நடைபெற்றன. காலஞ்சென்ற ஷை அம்மையின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி. வேண்டிக்கொள்ள பிரார்த்திக்கும்,

A. DESLVA,
Proprietor, Rangoon Town,
Band Barr Street,
Rangoon.

சுரூபங்கள்.

முழு வர்ணமுள்ளது.

வேத நேர்த்தியானது! வேத அருமையானது!!

1. போர்சலீன் :—1. (சேசுவின் திரு இருதயம், அர்ச். தேவமாதா, சூசையப்பர், அந்தோனியார்.) 7" ரூ. 2 8 0. 8" ரூ. 3 8 0. 9" ரூ. 5 0 0. 10" ரூ. 7 0 0. 12" ரூ. 9 8 0. 14" ரூ. 11 0 0. 2. (குழந்தை சேசு.) 9" ரூ. 6 8 0. 12" ரூ. 9 0 0.

தீர்த்தத்தொட்டி:—3. (சேசுவின் திரு இருதயம் உள்ளது ரூ. 6 0 0. அர்ச். சூசையப்பர் கிளிஞ்சிலில் செய்யப்பட்டது ரூ. 10 0 0.

2. தந்த பிளாஸ்டர் சுரூபம் வர்ணமில்லாதது:—(சேசுவின் திரு இருதயம், அர்ச். சூசையப்பர்.) 10" ரூ. 7 0 0. 12" ரூ. 9 8 0.

3. பிளாஸ்டர் சுரூபம் (வர்ணமில்லாதது:) —சேசுவின் திரு இருதயம், அர்ச். தேவமாதா, சூசையப்பர் 6" ரூ. 2 0 0 அர்ச். அந்தோனியார், காவல் சம்மனசு 6" ரூ. 1 4 0.

4. மெட்டல் :—(அர்ச. தேவமாதா, சூசையப்பர்.) 12" ரூ. 12 0 0. அர்ச். தேவமாதா, சூசையப்பர், அந்தோனியார் 4" ரூ. 2 4 0. 6" ரூ. 3 4 0. சேசுவின் திரு இருதயம் 3" ரூ, 1 2 0. அர்ச். தேவமாதா 2" ரூ. 0 10 0.

5. மண் சுரூபங்கள் :—(அர்ச். லூர்து மாதா, தேவமாதா, சூசையப்பர், சேசுவின் திரு இருதயம், அந்தோனியார் மற்றதும்.) 9" ரூ. 3 8 0. 12" ரூ. 4 8 0. 18" ரூ. 10 0 0. 24" ரூ. 15 0 0. 30" 20 0 0. 36" ரூ. 25 0 0.

சுருபங்கள் வேண்டியவர்கள் விலையில் பாதி அட்வான்ஸாக அனுப்பவேண்டியது.

☞ விலைகள் காலத்துக் கிரயப்படி மாற்றக்கூடியது.

படங்கள், அலுமீனும் சுரூபங்கள், பாடுபட்ட சுரூபங்கள், உத்தரியம், ஜெபமாலை இன்னும் வேத புஸ்தகங்கள் முதலிய சாமான்கள் வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

எ. புஷ்பம் அண்டு கோ.,
நெ. 37. ஆனந்தபுரம்,
திருச்சினுப்பள்ளி,
(S. INDIA.)

இனிய செந்தமிழ் நாவல்கள்!

பிரதாப முதலியார் சரித்திரம்.

400-பக்கங்கள் அடங்கிய இன்பமான நாவல்.

(வேதநாயகம் பிள்ளை எழுதியது)

இஃதோர் சரித்திர தொடர்பாயிருந்தாலும் நூதன கற்பிதமாயிருப்பதுமன்றி. இதில் ஆங்காங்கு வியப்பும் விநோதமுமான பல கிளைக்கதைகளும் பற்பல நியாயபோதகங்களும் உலகத்திற்கவசியமான அநேக சல்லாபங்களும் கடவுளின் பெருமையும் கல்வியினருமையும் இன்னும் பற்பல விஷயங்களும் வாசாமகோசரமாக வரையப்பட்டிருக்கிறது. கையில் எடுத்துப் படிக்க ஆரம்பித்தால் கீழேவைக்க மனம் வராது. படிக்கப்படிக்க ஒவ்வொரு வரியும் ஆனந்தமூட்டும். **புதிய பதிப்பு விலை ரூபாய் 1. அணா 2.**

சுகுண சுந்தரி.—மேற்கூறியது நற்கருத்தும் நன்னடையும் வாய்ந்த தமிழ் நாவல். இதில் அலங்கார வசனங்களும் ஆழ்ந்த கருத்தும் அபிநவகற்பனைகளும் அடங்கியிருக்கின்றன. இக்கதாநாயகி சுகுண சுந்தரி சிறைபிடிக்கப்பெற்று ஆகாய சஞ்சாரம் போதலும், கன்னிகாமடத்தில் புகுந்து அபயாஸ்தம் அளிக்கப்பெறுதலும் பார்த்துப் படிக்க எவரும் ஆநந்தமடையாமலிரார். விலை அணா 10.

புதிய வேதச் சாமான்கள்.

நமக்கு இந்த மாதம் புதிதாய் சீமையிலிருந்து, அநேகவிதமான புதிய வேதச் சமான்களும், படங்களும் வந்திருக்கின்றன.

அவைகளின் விபரம்.

வீடுகளில் பூச்சியமாய்த் திரு இருதய ஆண்டவரை வீட்டுக்கு இராஜாவாக ஸ்தாபிக்கிறதற்காக பரிசுத்த பாப்புவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்ணம் தீட்டிய அழகான இருதய சேசுநாதரின் பூச்சியமான படங்கள்.—10″×8″ ஒன்று விலை அணா 2. 17″×13″ அணா 6. 20″×16″ அணா 8. 19″×23″ ரூபாய் 1. 22″×29″ ரூபாய் 1. அணா 4.

இன்னும் இதே விலையிலும் இதே அளவிலும், அர்ச். அந்தோனியார், திருக்குடும்பம், சூசையப்பர், இருதயமாதா படங்களும் உண்டு.

செப புத்தக படங்கள் சயிஸ்.—பலவித படங்கள் 100 ரூபாய் 2.

வெள்ளிப் பூச்சு சுரூபங்கள்.—2-அங்குலம் உயரமுள்ள அழகான இருதய சேசு, அர்ச். அந்தோனியார், லூர்துமாதா, சூசையப்பர் முதலியவை. விலை ஒவ்வொன்றுக்கும் அணா 8.

உத்தரீய பிரேமஸ் அல்லது வட்டச் சுரூபங்கள்.—டஜன் விலை அணா 8, 12, ரூபாய் 1, ரூபாய் 1—அணா 8 வரையிலும் உண்டு.

கண்ணாடியில் பதித்த வெள்ளி மெடல்கள்.—விலை ஒன்று அணா 3, 4, 6, 8 வரையிலும் உண்டு.

ஜெபமாலைகள்.—வெள்ளை தந்தம்போன்ற மணிகளினால் செய்தது. பூதக்கண்ணாடி படம் போட்ட குருசுடன், நீளம் 17 இஞ்சு விலை ஒன்று 12 அணா. டசன் விலை ரூபாய் 6—அணா 12. தந்தம்போன்ற மணிகளிற் செய்தது. நீளம் 14 இஞ்சு, விலை ஒன்று அணா 8. டசன் விலை ரூபாய் 5—அணா 4. மரமணிகளில் செய்து வெள்ளிப் பூச்சு கம்பி போட்டது, நீளம் 17 இஞ்சு, டசன் விலை ரூபாய் 3. ஒன்று விலை அணா 5. ஷை இஞ்சு ஷை நீளம் டசன் விலை ரூபாய் 3—அணா 8. ஒன்று அணா 6. மரமணி பித்தளைகம்பி போட்டது நீளம் 17 இஞ்சு, விலை டசன் ரூபாய் 2—அணா 8. ஒன்று அணா 4. ஷை நீளம் 21 இஞ்சு, விலை டசன் ரூபாய் 3—அணா 8. ஒன்று அணா 5. திரம் ஜெபமாலை வெள்ளிப் பூச்சு பூசி அல்மீனியத்தில் செய்தது ஒன்று விலை ரூபாய் 2—அணா 8.

எக்ஸ். பி. பாய்வ,
நெ. 10. கன்சிஸ்டேரி பில்டிங்ஸ்,
கொழும்பு, சிலோன்.

X. P. PAIVA,
No. 10. Consistory Buildings,
COLOMBO, CEYLON.

புத்தக விளம்பரம்.

கபாலமலே.

"கபாலமலே" என்னும் நாமம்பூண்ட இப்புது ஜெபப் புத்தகத்தின் 2-ம் பதிப்பு தற்போது "நல்லாயன்" அச்சாபீசில் விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இப்புத்தகத்தின் சிறந்த பெயருக்குத் தக்கபடி, நமது இரட்சகரின் துயரத்துக்குரிய பாடுகளின்பேரில் நமக்குத் துக்க மனஸ்தாபத்தையும் பக்தியையும் உண்டாக்கும்படியான தியானங்களும் ஜெபங்களும் இதில் அடங்கியுள்ளன. ஆதலின் வேறெந்த ஜெபப்புத்தகத்திலுமில்லாத அநேக நூதன ஜெபங்களை யிதிற் காணலாம்.

வழக்கமான காலை மாலை ஜெபங்களும், மாதாப் பிரார்த்தனை, திருநாமத்தின் பிரார்த்தனை முதலியவைகளும் இதிலுண்டு.

வாரத்தின் 7-நாட்களில் ஒவ்வொருநாளிலும் திருப்பாடுகளின் பேரில் தியானங்களும், திருப்பாடுகளைத் தியானித்துக்கொண்டு பூசைகாணும் வகையும், 7 விதமான மனஸ்தாபப் பிரகரணங்களும், வாரத்தில் வரும் 7-நாட்களில் ஒவ்வொரு நாளிலும் திவ்யநன்மை வாங்குமுன் சொல்லத்தக்க ஆயத்த ஜெபங்களும், தேவநற்கருணை வாங்கினபின் செய்யவேண்டிய நன்றியறிந்த தோத்திரங்களும், வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் தேவநற்கருணை சந்திக்க 7 வகையான சந்திப்பு ஜெபங்களும் இதிலடங்கியிருக்கின்றன. மகா துயரத்தை யுண்டுபண்ணத் தக்கதும் நூதனமானதுமான சிலுவைப்பாதை யிதிலடங்கியிருக்கிறது மல்லாமல், நமது இரட்சகருடைய பாடுகளின் எத்தனங்களான சிலுவை, ஈட்டி, ஆணி, எணி, முண்முடி முதலானவைகளைப் பற்றியும் திரு இரத்தம், இவரைப் பொதிந்த பரிவட்ட முதலான பரிசுத்தப் பண்டங்களைப் பற்றியும் சுருக்கமான சரித்திரமும் ஜெபங்களும் இதிலடங்கியுள்ளன.

அல்லாமலும் தபசுகாலத்தின் ஒவ்வொரு வாரத்திலுஞ் சொல்லத்தக்க ஜெபங்களும், பிரார்த்தனைகளும், வியாகுலமாதாவைக் குறித்து ஜெபங்கள், புதிய சங்கீதம், பிரார்த்தனைகளாகிய இவைகளும் இதிலுண்டு.

முக்கியமான அர்ச்சியசிஷ்டவர்களைக் குறித்து ஜெபங்களும், பிரார்த்தனைகளும், அந்தந்தக் காலத்துக்கு அவசியமான வெவ்வேறு ஜெபங்களும், வியாதியஸ்தரும் மற்றவரும் சொல்லத்தக்க பலனுள்ள மனவல்லயச் செபங்களும், பாலர், பெரியவர்களின் அடக்கத்துக்கு வேண்டிய வெவ்வேறு ஜெபங்களும் தேவார முதலியனவும் இதிலுண்டு.

"கபாலமலே" என்ற இந்த ஜெபப் புத்தகம் கையிலிருந்தால் வேறெந்த ஜெபப் புத்தகமும் அவசியமிரா தென்னலாம். ஏனெனில் மற்ற புத்தகங்களிலுள்ள பிரதானமான ஜெபங்கள் இதிலிருப்பது மன்றி ஏராளமான நூதன ஜெபங்களு மிதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

புத்தகத்தின் சைஸ், 16 மோ. டபில் பூல்ஸ்காப் 549 பக்கங்கள்.

கலிக்கோ கட்டிடம், விலை ரூ 1—0—0 தோல் கட்டிடம், விலை ரூ 1—4—0.

வேண்டியவர்கள் "நல்லாயன்" ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

விளம்பரம்.

ST. ANN'S ORPHANAGE RAFFLE.

புத்தகத்துக்கு முந்துங்கள்.

தர்ம விஷயமாக 4-அணு செலவழிப்பதால் ஏழைகளாகிவிடமாட்டீர்கள்.

டிக்கட்டு ஒன்று அணு நாலுதான்.

200-பிரைசுகள்.

ரூ 1000த்திலிருந்து ரூ 5 வரை இருக்கிறது. 22 டிக்கட்டுகளடங்கிய புஸ்தகம் ரூ 5/– (ஒரு புஸ்தகம் விற்றால் 2 இனும் டிக்கட்டும் 2 புஸ்தகம் விற்றனுப்பினல் 4 இனும் டிக்கட்டும் ஒரு ஸ்பெஷல் டிக்கட்டும் கிடைக்கும்.)

THE CATHOLIC MALE ORPHANAGE RAFFLE.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

டிக்கட்டு ஒரே ரூபாய்.

பிரைசுகள் 200.

ரூ 4000த்திலிருந்து ரூ 5 வரை இருக்கிறது. 11 டிக்கட்டுகளடங்கிய புஸ்தகம் ஒன்று ரூ 10/– (ஒரு புஸ்தகத்துக்கு ஒரு டிக்கட்டு இனும்.)

சகல மூல வியாதிக்கும் மோதிரம்.

1 விலை ரூ	1	0	0	6 விலை ரூ	5	6	0
3 விலை ரூ	2	12	0	12 விலை ரூ	10	4	0

எல்லோரும் அவசியம் வாசிக்கவேண்டிய புஸ்தகம் "லீலியும் ரோசாவும்" விலை அணு 12. வேண்டியவர்கள் எழுதவும்.

G. சவரிமுத்துப் பிள்ளை,

சாத்தூர், இராமநாதபுரம் (ஜில்லா.)

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவை யென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,148—15—0 இத் தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
எற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,478	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (ஆகஸ்ட்டுமீ த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1.508	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ, North Georgetown, Madras, E.

வீடுகளில் பூஜியமாய் வைக்கப்படும் சேசுவின் திரு இருதய படங்கள் விலை ஒன்று அணா 12. ரூபா 1, 2, 3.



5-ரூபாய் சாமான்வரையில் V. P. அனுப்பப்படும்.

வெள்ளை டுவில், காக்கி டுவில், கமிஸ் ஒன்று ரூ 2¼, 2½, 3, 3½. கோடுவிழுந்த கமிஸ் ரூ 2½, 3, 3½, 4½. வெள்ளை கைகுட்டைகள், டஜன் ரூ 3½, 4, 4½. பனியன் ஒன்று அணா 14, ரூ 1, 1½. கல்கத்தா அமண்டாபேட் வேஷ்டிகள் 6, 6½ முழம் ஜதை ரூ 7, 8½; 9. சாய வேஷ்டிகள் ஜதை ரூ 5½, 6, 7, 8. வெள்ளை சரிகை அங்கவஸ்திரம், தலைக்குட்டை ரூ 8, 12, 15. புதுச்சேரி பட்டுகுட்டை ஒன்று ரூ 6½. கல்கத்தா வெள்ளை பட்டு அங்கவஸ்திரம் ரூ 12. பெங்களூர் பட்டு அங்கவஸ்திரம் ரூ 12, 18. கொரனாட்டு பட்டு சேலை ஒன்று ரூ 27, 30, 35, 40, 50. துணி சேலை ரூ 12, 15. இங்கிலீஷ் சீட்டி சேலை ரூ 6½, 7, 7½. வெகு நேர்த்தியான கல்கத்தா அமண்டாபேட் கரை வெள்ளை சேலை ரூ 5½, 6, 6½. மதுராசில் நெய்யும் நூலும் பட்டும் கலந்த வாழைப்பூ சேலை, சிலேட்கலர் சேலை, வெங்காய சேலை, டைமன் கோடு சேலை, கருப்பு சேலை, நாகப்பழ கலர் சேலை, ரூ 10½. நரை ரோமத்தை கருமையாக்கும் (மார்னிங் ஸ்டார் என்னும் கருப்பு புஷ்பம்) பெட்டி ரூ 1. வேதசாமான்கள் :—இருதய ஆண்டவர், அமலோற்பவ மாதா, குழந்தையோடு மாதா, அந்தோனியார், சூசையப்பர், லூர்துமாதா 6" ரூ 2/2/- 9" ரூ /3/12- 12" ரூ 6/- இருதய ஆண்டவர், இருதயமாதா, குழந்தை திரேசம்மாள், திருக்குடும்பம், அந்தோனியார் முதலிய Photo. புஸ்தக படம் டஜன் ரூ 1. சட்டங்களில் போடக்கூடியபடங்களும், ஜெபமாலைகளும் உண்டு.

கவனிப்பு :—5-ரூபாய்க்கு மேற்படும் சாமான்களுக்கு முன்பணம் அனுப்பினால் மாத்திரம் சாமான் அனுப்பப்படும். கர்மேல் உத்தரியம், நீல உத்தரியம், இருதய பேட்ஜ் குரோசாகவும், பீட ஜோடினைக்கு வேண்டிய பலவித புஷ்பக்கொத்துகளும் ஆர்டர் பிரகாரம் சுத்தமாய் செய்தனுப்பப்படும். கேட்லாக் இன்னும் தயாராகவில்லை. கம்பெனியின் மறுமொழி வேண்டியவர்கள் ஸ்டாம்ப் அனுப்பிவைத்தல்வேண்டும்.

Messrs. **MAY & Co.,** Royapettah, Madras.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாது சிரோன்மணிகளைப்பற்றிய இச் சரிதையானது 417-பக்கங்கள் அடங்கியது. இஃது திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பிலியர்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணாக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை செண்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12-அணா; இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1.

சூசை கோவிந்தராவ், ஏஜண்டு, மதுரை.

LAGHIAM DEPOT.

No. 44, Namboolyar Street, Sowcarpet, Madras.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்க பலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும், அயக்காந்த செந்தூரமுமே.

இதை அவசியம் முழுதும் வாசியுங்கள்.

(முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும்,
தேகபலத்தை தரும் ஔழதம் வேறொன்றுமில்லை.)

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று; அபாரமான சத்துவத்தைத் தரக்கூடிய சக்தீ அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி ஒரே தடவை வாங்கியுண்ண எமது மருந்தின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய குணங்களாவன.

துர்நடத்தையா லுண்டாகும் 20-வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்த பாண்டு, கைகால் முடக்கு, ஒடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு, தொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர் வடிதல், சோம்பல், நித்திரை யில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத வாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக வெட்டை சம்பந்தமான வியாதிகளை பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்தநரம்புகளையு மிக முறுக்கேற்றி அபரிமிதமான ரத்த விர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறொன்றுமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி தேக தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையான தென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்தியாக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கியுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம் மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்து கூறியபோதிலும் தகும். தவிர இதை நோய் உள்ளவரேதான் சாப்பிடவேணும் என்ற அவசியமில்லை. யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட சாஎளவும் துற்பலமே ஏற்படாது, இது சத்தியம். தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானால் முழுதும் குணமாவார்கள். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதியாவோம். அதாவது யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் நல்ல பெயர் வாய்க்கும்பொருட்டு கொஞ்சமேனும் திரேக சிரமம் பாராமல் எம்மால் கூடிய வரையில் கஷ்டப்பட்டு முடித்து பரோபகார்த்தமாக ஜனங்கள் வாங்கியுண்டு திரேகத்தை பொன்மய மாக்கிக்கொண்டு நீடூழிகாலம் வாழ்வார் என்னும் அபிப்பிராயத்தால் உண்மையில் இதை வெளியிட்டோம். இந்த லேகிய செந்தூரமானது (போலிப்பண்டித பொய்யர்களாகிய வைத்திய வாசனையே யில்லாத சில தாந்தோன்றி தம்பிரான்கள் பணத்தை கவரும்பொருட்டு வெளிப்படுத்தும் விளம்பரத்தில் இதுவும் ஒன்று என எண்ணவேண்டாம்.) இவ் வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்திற்கு பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். எமது லேகிய செந்தூரத்தை உண்டவர்

...மன எமது கம்பெனிக்கு யாம் கோராதபடியே ஏஜண்டாய் நாடுவார்கள். இது உண்மை. அப்படி ஏஜண்டாய் சேருவோருக்கு மருந்துகட்கு மட்டும் 100-க்கு 25 கமிஷன் தரப்படும். அப்படி ஏற்பட்டபோதிலும் மாதத்திற் கொருவிசை கணக்கு பைசல் செய்யப்படும். எமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி எத்தனைதரம் பிரமாணம் செய்யச் சொன்னபோதிலும் காத்துக்கொண்டிருக்கிறோம். இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும், எமது உண்மை நன்கு விளங்கும்

வாதாதிக்க தோஷத்தினாலாவது. துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது. அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, ஸ்திரீ வியாதியினாலாவது. மற்றெந்தக் காரணத்தினாலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை பண்டிதருடைய லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானால் தேகாரோக்கியம். வலிவு, அழகு முதலியது பெற்று ஆநந்தத்தில் மூழ்கும்படிச் செய்யுமென்பதில் தடையேயில்லை.

வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழுநம்பிக்கைவைத்து ஒரே வொருதரம் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அடையும் ஆநந்தத்திற்கு அளவேயில்லை. லேகிய செந்தூரத்தினாலுண்டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின் நமது லேகியத்துக்குச் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள், நேசர் முதலியவர்க்கு நீங்களே ஷை பண்டிதருடைய லேகிய பஸ்பத்தின் சிறந்த குணத்தையும், நீங்கள் அதனாலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக்கூறி சிபாரிசு செய்வீர்கள் என்பது நிச்சயம்.

இந்த லேகிய செந்தூரத்திற்கு பத்தியமே கிடையாது. சகலமும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்கு துரோகம் செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி அதிகமாய் எடுக்கும். பச்சைப்பயறு கொழம்பு. தயிர், பால், கறி, மார்க்கண்ட சூப்பு. நெய் இவை அதிகமாய் தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. பசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எருமைப்பால், பசும்பால். ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவார்களேயானால் அது தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம். சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது வலுத்து புதியரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் தேகமானது இளைக்காமல் முற்றிலும் அக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதை புருஷன் பெண்சாதி இருவர் ஏக காலத்தில் ஒற்றுமையாய் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கு மக்கள் யாதொரு நோய் இல்லாதபடி ரொம்பவும் தேஜசாய் தோன்றுவார்கள். இதைப்பற்றிப் பிரமாணமாய் சொல்லுவோம். நல்ல வாலிபதசையைக் கட்டாயம் அடைவார்கள். இது உண்மை. இதைப் பற்றி இன்னும் எழுதமுடியாது.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ 1—12—0.
போஸ்டேஜ் அணா 4.
ஒரே காலத்தில் 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் இனாம்.

சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்க்கு 100-ரூபாய் பரிசளிக்கப்படும்.

நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையில் இருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔழதமாகும். இது ஆங்கில யூனானித் தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்காலி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்தது பிரத்தியட்ச அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டு வித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை :—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ 0 8 0
ஷை தபாற்கூலி 0 3 0 டஜன் 1-க்கு ரூ 5 0 0
ஏக காலத்தில் 2-பாக்கெட் வாங்கினால் தபாற்கூலி இனாம்.
வர்த்தகர்களுக்கு 100-க்கு 25 கமிஷன்.

எமது விலாசம் :— **லேகியம் டிபோ,**
நெ. 44, நம்புலையர் வீதி, சௌக்கார்பேட்டை, மதராஸ்.